Nov 1929

JL
R673ണ211, N128
N.29.2.11.
187137

6 - DEC 1929
MADRAS

ஓம்

# சித்தாந்தம்

" ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானதுந வாணியை உள்நாடு "

| மலர் உ | சுக்கில ஆண்டு கார்த்திகைத் திங்கள்<br>1929 ஷு நவம்பர்மீ | இதழ் கக |
|---|---|---|

## சிவஞான போதம்

[அ - முத்தைய பிள்ளை - பி. ஏ.]

### மங்கல வாழ்த்து.

*கல்லானிழல் மலை*
*வில்லாருளிய*
*பொல்லாரிணைமலர்*
*நல்லார் புனைவரே*

### முப்பொருளுண்மை

**சூத்திரம் க.**

*அவன் அவள் அதுவெனும் அவை மூவினை*
*[மையின்*
*தோற்றிய திதியே ஒடுங்கி மலத்துளதாம்*
*அந்தம் ஆதி என்மனார் புலவர்.*

இதிற் பெறப்படுவன,

**கா**ணும் உலகம் ஒருவன் ஒருத்தி ஒன்று என்னும் அவயவப் பகுப்புடையதாயும் பல்வேறு வகைத்தாய சடமாயும் சுட்டி யறியப்படுவதாயும் இருக்கிற தென்பதும், இவ்வேதுக்களால் அது தோன்றி நின்று அழிதல் உண்மை யென்பதும், முத்தொழிற்படலால் உள்பொருளென்பதும், முத்தொழிற்படுவதாயும் உள்பொருளாயு மிருத்தலின் அதைத் தோற்றுவிக்கும் நிமித்த காரணன் உளனென்பதும், தோற்று விக்கும் நிமித்த காரணனே ஒடுக்குவிப்பவனுதல் வேண்டு மென்பதும், ஒடுக்குவிக்கப் படுவதே தோற்றுவிக்கப் படுகிற தென்பதும், ஒடுங்கியுளதாதல் மலபரிபாகப் பொருட்டென்பதும், ஒடுங்குவதும் தோன்றுவதும் அதற்கு முதற் காரணமாகிய பாசத்தினிடமே யென்பதும், மேற்சொன்ன நிமித்த காரணன் சுட்டுணர்வின்றி நிற்பவனென்பதும், அவனே பதி யென்பதும் அவன் ஒருவனே யென்பதுமாம்.

**குறிப்பு** :—இது உலகிற்கு நிமித்தகாரணனாகிய பதிப்பொருள் உண்மை கூறிற்று. காணும் உலகு உள்பொருளென்றும் அது தோன்றி நின்றழிதற்கு நிலைக்களமாய முதற்காரணமாம் பாசமுளதென்றும், அதை அம்முத்தொழிற் படுத்தியும் சுட்டியறியப்படாது நிற்கும் நிமித்த காரணனாகிய பதி ஒருவனென்றும் பெற்றாம்.

**சூத்திரம் உ.**

அவையே தானேயாய் இருவினையில்
போக்குவரவு புரிய ஆணையில்
நீக்கமின்றி நிற்குமன்றே..

இதிற் பெறப்படுவன,

முற் சூத்திரத்திற் கண்ட அந்தமென்ற முதல்வன் அவையென்று சுட்டிய பல்வகைப்பட்ட உயிர்களுடன் "உலகெலாமாகி வேறா யுடனுமாய்" என்றபடி, கண்ணும் அருக்கனும் போல் வேறாயும், கண்ணொளியும் ஆன்ம போதமும்போல் உடனாயும், கலந்தவனாய், அவைகள் இரு வினைகளால் இறத்தல் பிறத்தல் புரியும் வண்ணம் பிரிப்பின்றிப் பண்ணும் ஓசையும் போலவும் பழமும் சுவையும் போலவும் உடனாய் நிற்பன் என்பதும், இருவினைகளும் பிறப்பிறப்புகளும் அவன தாணையினாலேயே நிகழுமென்பதுமாம்.

**குறிப்பு** :—இது, இறைவன் நிமித்த காரணனென்ற உண்மையால் உலகம் முத்தொழிற்படுதற்கு இன்றியமையாது வேண்டப்படும் துணைக்காரணம் முதற்காரணங்களாகிய பாச உண்மையையும், அவற்றால் உலகம் காரியப்படுமாறும் கூறிற்று. உலகம் ஒடுங்கி உளவாதல் இங்ஙனம் என்றுரைக்கு மாற்றான், முதல்வனின் தடத்த விலக்கணமாகிய பொதுவியல்பும் உரைக்கப் பெற்றாம். ஆரிய வேதத்து அத்து[illegible] என்பது[illegible] இக் கருத்துடையதே.

187137

**சூத்திரம் ௩**

உளது இலது என்றலின் எனதுடல் என்ற[லின்
ஐம்புலனொடுக்கம் அறிதலின் கண்படில்
உண்டிவினை யின்மையின் உணர்த்த உணர்
மாயா இயந்திர தனுவினுள் ஆன்மா. [தலின்

இதிற் பெறப்படுவன,

உடம்பினுள் ஒளித்திருக்கும் அறிவுப்பொருள் மேற் சூத்திரங்களிற் சாதித்து நிறுவப்பட்ட சார்மாயை அல்லவென்பதும் தற்பரம் அல்லவென்பதும் தனி யென்பதும் காண்பிக்குமாறு அது உடல், ஐம்புலன்கள், ஐம்புலன்களின் ஒடுக்க நிலையாகிய சூக்கும தேகம், பிராணன், பிரமப்பொருள் இவைகளின் வேறென்பதும் சூன்யமல்ல வென்பதும், உடம்பு முதலியவற்றின் சமுதாயமல்ல வென்பதுமாம்.

**குறிப்பு** :—இது காணப்பட்ட உடம்பை ஆராயும் வழியாய்ப் பசுக்களதுண்மை கூறிற்று. தவிர மேற் சூத்திரத்திற்கண்ட முதல்வனதிலக்கணத்தையும் வலியுறுத்திற்று.

இலது = சூன்யம் = பாழ் : உண்டி = விடயங்களி னிடமாகவரும் இன்பநுகர்ச்சி: வினை = உடம்பு சேட்டித்தல் அல்லது செயற்படுதல். இயந்திரதநு = சூத்திரப் பாவை போன்ற உடம்பு.

இம்மூன்று சூத்திரங்களாலும் அநுமான அளவையால் பதி பசு பாசங்களாகிய முப்பொருளுண்மை விளக்கப்பட்டது.

## முப்பொருளிலக்கணம்

**சூத்திரம் ௪.**

அந்தக்கரணம் அவற்றினொன்றன்று அவை
சந்தித்தது ஆன்மா சகசமலத் துணராது
அமைச்சர சேய்ப்பநின்று ஐந்தவத்தைத்தே.

இதிற் பெறப்படுவன,

ஆன்மா, மனம் புத்தி சித்தம் அகங்காரம் என்னும் அந்தக்கரணங்களில் ஒன்றல்ல வென்பதும், அவ்வாறாயினும் அது செம்பில் களிம்புபோல் மூல மலத்தோடு உடனாய் நிற்றலின் தானாயுணரா தென்பதும், தனக்குத் துணையாகிய அவைகளோடு கூடி நின்று முறையே அரசும் அமைச்சும் ஒப்ப உணருமென்பதும், உணர்ந்து சாக்கிரம் முதலிய ஐந்து அவத்தை யடையு மென்பதுமாம்.

**குறிப்பு**:—இது பசு இலக்கணம் கூறிற்று. முதற் சூத்திரத்திற் கூறிய மூல மலத்தின் தன்னியல்பு, அறியாமைச் செய்தல் என்பதும் கருவிகளோடு கூடி அவத்தை உறுவதாகிய விபரீத உணர்வை உண்டாக்கல் அதன் பொது வியல்பென்பதும் பெற்றாம்.

ஆன்மா = வியாபகம். மலம் = மறைத்தலைச் செய்வது. சகசமலம் = மூலமலம்.

**சூத்திரம் ௫.**

விளம்பிய உள்ளத்து மெய்வாய் கண்மூக்கு
அளந்தறிந்தறியா ஆங்கவைபோல
தாம் தம்முணர்வின் தமியருள்
காந்தம்கண்ட பசாசத்தவையே.

இதிற் பெறப்படுவன,

உலகில் உயிரோடு கூடிய உடம்பிலுள்ள ஐம்பொறிகள் தானே விஷயங்களை யறியும் தன்மைத்தல்ல வென்பதும், அவை, உயிரோடு ஒற்றுமைப்பட்ட வழியே ஆன்மாவால் உணருமென்பதும், அவ்வான்மாவும் தன்னாலே யுணரும் இந்திரியங்களைப் போலத் தானும் தன்னை யுணராது நின்று, இரும்பு காந்தத்தின் வயப்படுமாறு, முதல்வன் சந்நிதி மாத்திரையாகிய அருளாலே தன்னையும் தன் முதல்வனையும் அறியுமென்பதும் அக்காரணம்பற்றி முதல்வனுக்கு விகாரம் ஏற்படுதலில்லை யென்பதுமாம்.

**குறிப்பு** :— இது பாச விலக்கணம் கூறிற்று. தவிர, இரண்டாஞ் சூத்திரத்திற் கண்ட துணைக்காரணம் முதற்காரணங்களினிலக்கண முணர்த்த வேண்டி அமைச்சும் அரசும் ஒப்பக் கரணங்களும் ஆன்மாவும் நின்றுழி இன்றியமையாது வேண்டப்படும் முதல்வன் உதவியையும் விளக்கிற்று.

**சூத்திரம் ௬.**

உணருரு அசத்தெனின் உணராதின்மை
இருதிறனல்லது சிவசத்தாமென [யின்
இரண்டு வகையின் இசைக்கு மன்னுலகே.

இதிற் பெறப்படுவன,

பதிப்பொருள் அளவைகளா லறியப்படும் பிரபஞ்சம்போல அழிபொருளாகிய அசத்தல்லவென்பதும், அன்றி அங்ஙனம் அறியப்படாத முயற்கோடு போன்ற சூன்யமல்ல வென்பதும், இவைகளின் வேறாய் பசுஞானம் பாச ஞானங்களால் அறியப்படாமலும் சிவஞானம் ஒன்றாலேயே அறியப்படும் இயல்பின தென்பதும், அக்காரணம்பற்றி அதைச் சிவசத்து அல்லது சித்துச்சத்து என்றல் ஏற்புடைத்தென்பதும் அது சித்தாயும் சத்தாயும் நிற்குமென்பதுமாம்.

இங்கு அசத்தென்றது அறிவாற் சுட்டியுணர் பொருள். உணருரு வெனின் அசத்து என மாறுக. 'எனின்' என்பதை உணராது என்பதன் பின்னும் கூட்ட வேண்டும். இன்மை = சூன்யம்.

**குறிப்பு** :— இது பதி இலக்கணம் கூறிற்று.

இம்மூன்று சூத்திரங்களானும் பதி பசு பாச இலக்கணம் கூறப்பட்டது.

## சாதனம்

**சூத்திரம் ௭.**

யாவையும் சூனியம் சத்தெதிர் ஆதலின்
சத்தே அறியாது அசத்திலதறியாது
இருதிறனறிவுளது இரண்டலா ஆன்மா.

இதிற் பெறப்படுவன,

வாக்கு மனாதீதமாகிய சிவசக்தியின் சந்நிதியில் உணருருவாகிய அசத்தெலாம் பாழாமென்பதும் ஆதலின் சத்தாகிய சிவம் அசத்தாகிய பிரபஞ்சத்தை அறிதல் செய்யாதென்பதும் அசத்தாகிய பிரபஞ்சம் அறிவில்லாத சடமாதலால் சத்தாகிய சிவத்தை அறிதல் செய்யாதென்பதும், ஆதலான் இருதிறனறிவுள்ள ஒன்று உண்டென்பதும் அது ஆன்மாவென்பதும் அது சத்தாதற்றன்மையும் அசத்தாதற் றன்மையுமாகிய இரண்டுமன்றி சதசத்தாயுள்ளதென்பதுமாம்.

சூன்யம் = விளங்கித் தோன்றாதது; இது இன்ன பொருள் என்று நம்மனோராற் சுட்டி யறியப்படுமாறுபோல முதல்வனாற் சுட்டி யறியப்படுவதாய் வேறு நில்லாமையாம். அறிவு—அனுபவ அறிவு.

**குறிப்பு :**—இது சதசத்தி னியல்பை உணர்த்தும் வழியாய்ப் பதி பசு பாசங்களினுண்மையையும் அவற்றின் இலக்கணங்களையும் தெரிந்து அதனாலாய பயன் பெறுதற்குச் செய்யவேண்டிய சாதனம் செய்தற்குரிய ஆன்மாவின் இயல்பு கூறிற்று. ஆன்மா, பெறவேண்டும் பயனைப் பெறுதற்குரிய சாதனத்தைச் சாதிக்கு மாற்றல் பெற்றதென்பது பெற்றாம்.

### சூத்திரம் அ.

ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தென
தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்த [விட்டு
அன்னிய மின்மையில் அரன்கழல் செலுமே.

இதிற் பெறப்படுவன,

உயிர் முன் செய்துவந்த புண்ணிய விசேடத்தால் அவ்வுயிருக்கு உள்நின்று உணர்த்திவந்த பரம்பொருள் குருவடிவமாய்த் தோன்றுமென்பதும் அவ்விதம்தோன்றி அப்பரம்பொருள் அவ்வுயிருக்கு அதன் உண்மை இயல்பை உணர்த்தி ஐம்புல வேடருக் குட்பட்டு வளர்ந்த மயக்கத்தை நீக்குமென்பதும் அவ்வுணர்ச்சி பெற்றமாத்திரத்தில் அவ்வுயிர் அவ் வேடரை விட்டு நீங்கித் தன் உண்மை இயல்பில் நிலைபெற்று அம்முதல்வன் திருவடிகளை அணையுமென்பதுமாம்.

**குறிப்பு :**—இது சாதிக்கும் ஆற்றலுடையே னென்றறிந்த ஆன்மா சிவஞானமுணருமுறைமையை உணர்த்திற்று.

### சூத்திரம் கூ.

ஊனக்கண் பாசம் உணராப் பதியை
ஞானக்கண்ணினிற் சிந்தை நாடி [தண்
உராத்துனைத் தேர்த்தெனப் பாசமொருவத்
நிழலாம் பதிவிதி எண்ணுமஞ்செழுத்தே.

இதிற் பெறப்படுவன,

குறையுணர்வாகிய பசு அறிவால் முதல்வன் உணரப்படான் என்பதும் அவனை அவனது திருவடிஞானத்தால் தன்னறிவின் கண்ணே ஆராய்ந்தறியக் கூடுமென்பதும் அத்திருவடி ஞானத்தால் பாசக்கூட்டம் நில்லாது பேய்த்தேர்போல் ஒழியுமென்பதும் அவ்விதம் ஒழிந்தவிடத்து பிறவித்துயராகிய வெப்பத்தைத் தணிக்கும் தண்ணிழலாய் பதிஞான அனுபவத்தால் உணரப்படும் ஞான சொரூபம் விளங்குமென்பதும் அது விளங்கியும் பயிற்சியினால் ஏகதேசப்பட்டுப் புறத்திற்செல்ல நோக்குவதாய் தன்னறிவை அங்ஙன மாகாதவாறு மடக்கி அகத்தே ஒரு குறியின்கண் நிறுத்தி நிட்டை கூடும்படி அஞ்செழுத்து ஓதுமுறையில் வைத்துக் கொண்டு சிந்திக்கச் சிந்திக்க அது அந்நோக்கத்தைப் பற்றறக்கெடுத்து ஞான சொரூபத்தை இனிது விளக்கிப் பூரண நிலையிற் கொண்டு செலுத்து மென்பதுமாம்.



**குறிப்பு :**—இது ஆன்ம சத்தி பண்ணுமுறை கூறிற்று.

இம்மூன்று சூத்திரங்களானும் பதி பசு பாசங்களின் உண்மை இலக்கணம் தெரிந்த ஆன்மா அவ்வறிவால் பெறும் பயனை அடைதற்குச் செய்யவேண்டிய சாதன இயல்பு கூறப்பட்டது. முறையே சாதிக்கும் பொருளதியல்பும் சாதித்துப் பெறப்படும் பொருளதியல்பும் சாதிக்கு முறையும் விளக்கப்பட்டன.

## பயன்.

### சூத்திரம் கo.

அவனே தானேயாகிய அந்நெறி
ஏகனாகி இறைபணி நிற்க
மலமாயை தன்னொடு வல்வினையின்றே.

இதிற் பெறப்படுவன,

ஞானக் கண்ணாற் காணப்பட்ட முதல்வன் ஆன்மாவாய் நின்ற முறையில், அவனிடத்து யான் எனது என்பதற்று ஏகனாகி ஆன்மா நிலைபெற்று நிற்பின் மலம் இன்றென்பதும் அதோடு ஆன்மா ஜீவச்செயல் நீங்கி சிவச்செயலில் அதாவது இறைபணியில் நிற்பின் மாயை, கன்மம் இல்லாதாகுமென்பதுமாம்.

**குறிப்பு :**—முன் சாதன இயலில் கூறியுள்ள சாதனா பயன்களாகிய பாசவீடு சிவப்பேறு என இரண்டில் ஆன்ம சத்தியால் பெறப்படும் பாசவிடுதி செய்து கொள்ளுமாறுணர்த்திற்று.

### சூத்திரம் கக.

காணுங் கண்ணுக்குக் காட்டு முளம்போல்
காண உள்ளத்தைக் கண்டு காட்டலின்
அயரா அன்பின் அரன்கழல் செலுமே.

இதிற் பெறப்படுவன,

பாச விடுதி பெறினும் பின்னும் சிவப்பேற்றுக்கு ஆன்மாசெய்யவேண்டிய தொன்றுளதென்பதும் காட்டக் காணும் தன்மையையுடைய கண், உருவத்தைக் காணும்படி அதனோடு ஒருங்கியைந்து நின்று காட்டி அவ்வுருவத்தைக் காண்கின்ற ஆன்மாவைப்போல் அறிவிக்க அறியும் இயல்புடைய அவ்வான்மா விஷயத்தை யறியும்படி முதல்வன் அதனோடு இயைந்து நின்று அறிவிக்க அறிந்து வருதலால் அவ்வத்துவித நிலையை மறவாது கடைப்பிடித்து அன்பு செய்துவர வேண்டுமென்பதும் அதனாலே முதல்வன் திருவடியாகிய சிவானந்தத்தை ஆன்மா அடையுமென்பதுமாம்.

**குறிப்பு:**—இது முற்சூத்திரத்திற் குறித்த ஏகனாகி இறைபணி நின்ற ஆன்மா சிவப்பேறு கூடுதலாகிய நிட்டையின் இயல்பு கூறிற்று.

### சூத்திரம் கஉ.

செம்மலர் நோன்றாள் சேரலொட்டா
அம்மலம் கழீஇ அன்பரொடு மரீஇ
மாலற நேய மலிந்தவர் வேடமும்
ஆலயந்தானும் அரனெனத் தொழுமே.

இதிற் பெறப்படுவன,

முற்சூத்திரத்திற் குறித்த சீவன் முத்தனானவன் தான் இறைவன் திருவடிகளைச் சேரவொட்டாது தன்னைத் தடைசெய்யும் இயல்புடையதாயிருந்த மும்மல அழுக்கையும் தன் உண்மை ஞானத்தாற் போக்கிக்கொண்டு, தன் போன்ற அயரா அன்பின் அரன் கழல் செல்லும் மெய்ஞ்ஞானிகளோடு கலந்து கூடுவனென்பதும், அங்ஙனம் கூடி மலமயக்கம் நீங்கப்பெறுவனென்பதும், நீங்குதலால் அன்புமிக்க அவருடைய திருவேடத்தையும் சிவாலயத்தையும் முதல்வனெனவே வழிபட்டு வாழ்வனென்பதுமாம்.

**குறிப்பு :**—இது, அயரா அன்பின் அரன் கழல் சென்ற முத்தற்குச் சீவன் முத்தி நிலைக்கண் அவ்வறிவிச்சை செயல்களை

ஒரோவழிப் புறத்துச் செல்லுங்கால் அவை செல்லும் இடம் இவை யென்பதுணர்த்து முகத்தால் வாக்கு மனாதீதமாய் பத்தியினால் மறவாதேத்த நின்ற முதல்வனை வாக்கு மனங்களுக்குக் கோசரமாம்படி தெளியக் கண்டு வழிபடுமா றுணர்த்திற்று.

இம்மூன்று சூத்திரங்களானும் பதி பசு பாசம் நன்குணர்ந்த ஆன்மா உண்மையறிவாற் செய்த சாதனத்தின் பயனாய பாசவீடும் சிவப்பேறும் பெற்று சிவஞானிகளோடு கலந்து கூடி சிவவேடத்தையும் சிவாலயத்தையும் சிவனெனவே வழிபடும் தன்மை பெறுமென்பது கூறப்பட்டது.

பலகலை யாகம வேதத்தினுட் பொருளாம் முப்பொருள்களாகிய பதி பசு பாசங்களை விளக்கலுற்ற இந்நூலாக்கியோன் அம்முப் பொருள்களின் பொது வியல்பை, அவைகளினுண்மையையும் இலக்கணத்தையும் கூறும் பிரமாண வியலும் இலக்கண வியலுமாகிய முதலாறு சூத்திரங்களானும், சிறப்பியல்பை சாதன வியலும் பயனியலுமாகிய இறுதியாறு சூத்திரங்களானும், விளக்கி யிருக்கிற தன்மை யுணரற்பாலது. ஞான நூல்களைப் பயில்பவர் அவைகளைப் படித்துச் சொற்பொருள் தெரிவதோடமையாது கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டைகூடல் என்னும் நான்கு வகையானும் படிப்படியாய்ப் பயின்றாலன்றி அநுபவ வுணர்ச்சி கைகூடப் பெறாரென்பது ஆன்றோர் துணிபாதலின் இந்நூலின் உண்மைப் பொருள்களை அவ்வாறு பயின்று பயன் பெறுக.

“ வைய நீடுக மாமழை மன்னுக
மெய் விரும்பிய அன்பர் விளங்குக
சைவ நன்னெறி தாந்தழைத் தோங்குக
தெய்வ வெண்டிரு நீறு சிறக்கவே.”

---

# “ நூல்போன சங்கிலி ”

[போ - முத்தைய பிள்ளை.]

தருமகட் பேசினேன் வீயவே
நூல்போன சங்கிலிபாற்
புகுமணக் காதலி னாலொற்றி
யூருறை புண்ணியன்றன்
மிகுமலர்ப் பாதம் பணிந்தரு
ளாலிவ் வியனுலக
நகும் வழக்கே நன்மையாப்
புணர்ந்தானா வலூரரசே.

**நம்பியாண்டார் நம்பி அந்தாதி சே ௬௯**

## கருத்து வேறுபாடுகள்.

இச் செய்யுளுக்குத் திருவண்ணாமலை ஆதீனம் ஸ்ரீ ஆறுமுகத் தம்பிரான் சுவாமிகள் கூறும் உரை வருமாறு:—தக்க மகட்பேசி விடுத்த கணவன் இறக்க அதனால் வைதவ்விய மடைந்த சங்கிலி நாச்சியாரிடத்துத் தம்மிடத்துதிக்கும் மணவிருப்பால், திருவொற்றியூரின்கண் வீற்றிருந்தருளும் சிவபிரானது மேலான தாமரை போலுந் திருவடிகளை வணங்கி, அவர் திருவருளினால் இந்த அகன்ற நில உலகத்துள்ளார் நகுதற்குரிய ஒழுக்கத்தை நன்மையாகக் கொண்டு அந்நாச்சியாரைத் திருமணம் புரிந்தவர் யாரெனில், திருநாவலூரின்கணவதரித்த நம்பியாரூரர். எ-று-ஏ இரண்டும் அசை.



### வேறொருவர் கூறும் உரை

தருமணக் காதலன் வீயவே எனப் பாடத்தை மாற்றிக்கொண்டு, குலத்திற்குத்தக்க மணமகனிறக்க, அதனால் மங்கலநாணிழந்து வைதவ்விய மடைந்த சங்கிலி நாச்சியாரைத் தம்மிடத்துதித்த மணவிருப்பால் நாவலூர் நம்பிகள் சிவபெருமானுடைய திருவடிகளை வணங்கி இவ்வுலகினர் நகுதற்குரிய புல்லொழுக்கத்தையே நல்லொழுக்கமாகக் கொண்டு திருமணஞ் செய்தனர். எ - று.

இவர், திருவந்தாதிக் கருத்தை விளக்குதற்குப் பெரியபுராணம் மேற்கோளாக மாட்டாதென்றும், தருமகட் பேசினேன் வீயவே எனப் பாடங்கொள்பவர் புரட்டரென்றுங் கூறுகின்றனர். சேக்கிழார் புரட்டரென்பது இவர் கருத்து. இவர் அறிவும் துணிபும் தம்மைப் புரட்டரெனக் காட்டுதற்குச் சான்றாயின.

இவ்விருவர் கருத்தைப் பின்பற்றி, உலகத்தார் இகழும் வழக்கையே நன்மையாகக் கொண்டு வைதவ்விய மடைந்த சங்கிலி நாச்சியாரைச் சுந்தரமூர்த்திகள் கலியாணஞ் செய்து கொண்டமையால் விதவா விவாகம் சைவருக் குரித்தென்று அறிவிலாச் சிறுவர் சிலர் பறையறைகின்றனர். கன்னி மாடத்தமர்ந்து திருவருள் வழி யொழுகும் சங்கிலியார் கலியாணம் உலகம் மகிழும் வழக்கென்பதை,

“ மண்ணிறைந்த பெருஞ்செல்வத்
திருவொற்றியூர் மன்னு
மெண்ணிறைந்த திருத்தொண்ட
ரொழிற்பதியோ ருடனீண்டி
யுண்ணிறைந்த மகிழ்ச்சியுட
னிம்பர்பூ மழைபொழியக்
கண்ணிறைந்த பெருஞ்சிறப்பிற்
கலியாணஞ் செய்தளித்தார் ”

என்னும் சேக்கிழார் திருவாக்காலறிந்து பாவத்துக்காளாகாது அடங்கி உய்க.

இவர்கள் கருத்தை மறுப்பவருள் சிலர், நூல்போன சங்கிலி யென்பதற்குத் தவத்திற் சென்ற சங்கிலியாரென்றும், பேர்போன மனிதன் என்றவிடத்து பேரிற் சிறந்த மனிதன் எனக் கொள்ளுமாறு போல நூலிற் சிறந்த சங்கிலியா ரென்றும், நூல் என்பதற்கு எண்ணம் எனப் பொருள் கொண்டு தம் எண்ணத்தின் படி சென்ற சங்கிலியா ரென்றும், நகும் வழக் கென்பதற்கு மகிழும் வழக்கென்றும், புகழும் வழக்கென்றும் கூறுகின்றனர்.

### உண்மை.

பெண்ணிருக்கு மிடத்தில் பலரும் வந்து கேட்பது வழக்கு. கேட்பவரெல்லாரும் மணமகனாகார். ஆவரெனில் அப்பெண் வியபிசாரி யாவள். ஆகையால் கேட்டவன் இறந்தால் பெண்ணுக்கு வைதவ்வியம் உண்டாகுமென்றல் எவ்வாறு பொருந்தும்? கலியாண மானபின் மகனிறந்தாலும், இருதிறத்தினரும் இசைந்து முடிவு செய்யப்பட்டுக் கலியாண மாகுமுன் மகனிறந்தாலும் மகளை வைதவ்விய மடைந்தவ ளென்றல் பொருந்தும். திலகவதியார் சரிதம் இவ்வுண்மையை வலியுறுத்தும். பெரிய புராணத்திற்கும் உரை யெழுதிய தம்பிரான் சுவாமிகளுக்கு அந்தாதிக்குத் தாம் கூறும் உரை, புராணக் கருத்தொடு மாறுபடு

மென்பது விளங்காமற் போனதுபற்றி என் சொல்வது !

இனி, இரண்டாவது உரைகாரர் தாம்கொள்ளும் பாடத்திற்குச் சான்று காட்டவேண்டு மென்பதை மறந்தனர். பெரிய புராணம், அந்தாதிக்குப் பின் வந்தது. ஆதலின் மேற்கோளாகாதெனக் கொண்டனர் போலும் ! வேறு நூல்களாயின் மேற்கோளாகா தென்பது பொருந்தும். அந்தாதிப் பொருளையே விரித்துக் கூறவந்த பெரிய புராணம் மேற்கோளாகாதென்றல் எவ்வாறு பொருந்தும் ? திருத்தொண்டத் தொகையை விளக்க வந்தது அந்தாதியும், அந்தாதியை விளக்க வந்தது பெரிய புராணமு மாதலின், அந்தாதிப் பொருளை நிர்ணயிப்பதற்குப் பெரிய புராணமே மேற்கோளாகு மென்பது கடைப்பிடிக்க.

இனி, நூல்போன என்பதற்கும் நகும் வழக்கென்பதற்கும் இவ்வுரைகாரரை மறுத்துரைப்பார் கூற்றுப் பொருந்துமாயினும், ஆசிரியர் கருத்தொடும் உலக வழக்கொடும் பொருந்துமென்று துணிந்து சொல்லுதற்கில்லை. உண்மை யாதெனிற் கூறுதும்.

நம்பியாண்டார் நம்பிகள் ஒவ்வொரு சருக்கத்து இறுதியிலும் சுந்தரமூர்த்திகளுக்கு ஒரு செய்யுள் சொல்கிறார். அவ்வாறே அச்செய்யுட்களின் கருத்தை விரித்துக்கூறிய சேக்கிழாரும் ஒவ்வொரு சருக்கத்து இறுதியிலும் சுந்தரமூர்த்திகளுக்கு ஒரு துதி சொல்கிறார். அவற்றுள்,

**நம்பியாண்டார் நம்பிகள் அந்தாதி செ. சo**

துணையு மளவு மில்லாதவன்
றன்னரு ளேதுணையாக்
கணையுங் கதிர் நெடுவேலுங்
கறுத்த கயலிணையும்
பிணையு நிகர்த்தகட் சங்கிலி
பேரமைத் தோளிரண்டு
மணையு மவன்றிரு வாரூ
ரானின்ற வற்புதனே.

(இ - ள்.) தான் தொழிற்படுதற்குப் பிறிதொருதுணையும், அளவைகளால் அளக்கப்படுதலு மில்லாத சிவபெருமான் றிருவருளே துணையாகக் கொண்டு, அம்பையும், பிரகாசமுடைய நீண்ட வேலையும், கரிய இரண்டு கயல் மீன்களையும், மான் நோக்கத்தையும் ஒத்த கண்ணையுடைய சங்கிலியாரது பெரிய மூங்கில் போலுந் தோள்களிரண்டையும் அணைகின்றவன் திருவாரூ ரனென்று சொல்லப்படும் அற்புதன். (எ - று.)

இச்செய்யுட் கருத்தைச் சோமாசிமாற நாயனார் புராணத்து இறுதியில் சேக்கிழாருங் கூறுகின்றார். அது வருமாறு :—

பணையுந் தடமும் புடைசூழு
மொற்றியூரிற் பாகத்தோர்
துணையுந் தாமும் பிரியாதார்
தோழத்தம்பி ரானாரை
யிணையுங் கொங்கைச் சங்கிலியா
ரெழின்மென் பணைத்தோளெய்துவிக்க
வணையு மொருவர் சரணமே
யரணமாக வடைந்தோமே.

என்பது.

இந்த இரு செய்யுட்களாலும் சங்கிலியார் கலியாணங் கூறப்பட்டதென்பது தெளிவா யறியக்கிடக்கின்றது. இவ்வாறு நம்பிகள் முன்னர்க் கூறிவிட்டுப் பின்னரும் சங்கிலியார் கலியாணத்தைக் கூறுவாராயின், கூறியது கூறலென்னுங் குற்றமாகவன்றோ முடியும் ? திருவருள் வசப்பட்டு நிற்கும் நம்பிகள் குற்றம்படக் கூறாரென்பது துணிபு. ஆயின், தகுமகட் பேசி



னேன் என்றற் றொடக்கத்துச் செய்யுளின் கருத்துத்தான் யாதெனில், அருளால் இவ்வியனுலகம் நகும் வழக்கே நன்மையாப் புணர்ந்தான் என்பது கூறுதற்கு முன்னர்க் கூறப்பட்ட கலியாணத்தை அநுவதித்தாரென்க. தகுமகட் பேசினேன் என்பது முதல் பாதம் பணிந்து என்பதுவரை அநுவாதம். ஆகவே, அந்தாதியின் சுசு-வது செய்யுளாற் கூறப்பட்டது, அருளால் இவ்வியனுலகம் நகும் வழக்கே நன்மையாய்ப் புணர்ந்தா னென்பது மாத்திரமேயன்றிப் பிறிதில்லை. உலகம் நகும் வழக்காவது, தாம் கூறிய உறுதிமொழியை மீறித் திருவாரூருக்குச் செல்ல நினைந்தமையும் கண்கெட்டமையும் நன்மையாக் கொள்ளுதலாவது, கண்கெட்ட பின்னரும் அப்பழிக்கஞ்சித் திருவொற்றியூரில் வசித்துக் கண் பெற எண்ணாது திருவாரூரை நோக்கிச் செல்லல். இவ்வுண்மையை,

" மேவரிய பெருந்தவம் யான்முன்பு
விளைத்தன வென்னோ
யாவது மோர் பொருளல்லா
வென்மனத்து மன்றியே
நாவலர்கா வலர் பெருகு
நதிகிழிய வழிநடந்த
சேவடிப்போ தெப்போதுஞ் சென்னியினு
மலர்ந் தனவால் "

என, தகுமட் பேசினேன் என்னுஞ் செய்யுட் கருத்தைக் கோட்புலி நாயனார் புராணத்து இறுதியில் சேக்கிழார் கூறுமாற்றால் நன்கு தெளிக. சுந்தர மூர்த்திகளும், " வழித்தலைப் படுவான் முயல்கின்றேன் " எனக் கூறுகின்றனர். நகும் வழக்கை நன்மையாக் கொள்ளும்படி செய்ததும் திருவருளேயென்பது உணர்த்த 'அருளால்' என்றனர். உறுதி மொழியை மீறினமையால் கண்கெட்டமை உலகம் பழிக்கும் வழக் கென்பது,

" அழுக்குமெய்கொடென்றெடுத்தசொற்பதிக
மாதிநீள்புரி யண்ணலை யோதி
வழுத்து நெஞ்சொடு தாழ்ந்துநின் றுரைப்பார்
மாதொர்பாகனார் மலர்ப்பத முன்னி
யிழுக்கு நீக்கிட வேண்டுமென் றிரந்தே
யெய்துவெந் துயர்க்கை யறவினுக்கும்
பழிக்கும் வெள்கி நல்லிசை கொடுபாவிப்
பணிந்துசாலவும் பலபல நினைவார் "

என்னும் சேக்கிழார் திருவாக்கா லறியப்படும்.

சுந்தரமூர்த்திகளும்,

" அகத்திற் பெண்டுகள்
நானொன்று சொன்னால்
அழையேல் போகுருடா
வெனத் தரியேன் "

என வருந்து கின்றனர்.

ஆகவே, நகும் வழக்கென்பதற்குப் பழிக்கும் வழக்கென்று கொள்ளுதலே பொருத்தம். மகிழும் வழக்கென்று கொள்ளின், மகிழும் வழக்கே நன்மை யாதலின், நன்மையாக் கொண்டா னென்னுஞ் சொற்குப் பொருட் சிறப்பில்லையாய் விடும்.

ஆயினும், அநுவாதமாவது முன்னர்க் கூறப்பட்ட தொன்றை மற்றொன்று கூறுதற் பொருட்டுப் பின்னருங் கூறலன்றோ ? அந்தாதியில் 40-வது செய்யுளிற் கூறப்பட்ட கலியாணத்தை 69-வது செய்யுளில் அநுவதிக்கு முறையில் முன்னர்க் கூறியவாறே கூறாது வேறு விதமாகக் கூறிய கருத்தென்னை யெனில், சங்கிலியார் சம்பந்தமான சில உண்மைகளை விளக்

குங் கருத்துப் பற்றி யென்க. அவை வருமாறு :—

சிவபெருமான் றிருவருள் துணையாகச் சங்கிலியாரை அணைந்தாரென்பது முன்னர் கூறப்பட்டது. எந்தப் பெண் எவர் துணையால் வாழுமோ அந்தப் பெண்ணை அவர் துணையாலன்றிப் பெற முடியாது. சங்கிலியார் தாம் பிறந்த இல்லத்தையும் தாய் தந்தையரையுந் துறந்து சிவபெருமான் விளங்கித் தோன்றுந் திருக்கோயிலை அடைந்து அப்பெருமான் திருவருளை துணையாக வாழ்கின்ரூராகலின், அவ்வருள் துணையாக அவரை அடைந்தாரென்று முன்னர்க் கூறி, திருவருள் துணையாக வாழ்கின்றவர் என்பதை 'நூல் போன' சங்கிலியாரென்று பின்னர் விளக்கினூர். 'நூல்போன' என்பதற்கு நூல் வழிச் சென்ற என்பது பொருள். நூல் வழிச் செல்லுதலாவது, இறைவன் திருவருள் வழிச் செல்லுதல்.

"கற்றதனு லாயபயன் என்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்"

என்னுந் திருக்குறளால் இறைவன் அருள்வழிச் செல்லுதலே நூல்வழிச் செல்லுதல் என்பது பெறப்படுமாறு காண்க. சங்கிலியாருக்குத் திருவருள் வழிச் செல்லும் எண்ணம் முன்னரே யிருந்தும், அது பெண் பேச விடுத்தவன் இறந்த பின்னர்தான் கைகூடிற்று. இவ்வுண்மையை விளக்க வேண்டி,

" தருமகட் பேசினேன் வீயவே
நூல்போன சங்கிலி "

என்று நம்பிகள் அருளிச் செய்தனர்.

நூல்போன சங்கிலி யென்பதற்குத் திருவருள் வழிச்சென்ற சங்கிலி யென்பதும், அவ்வாறு செல்லல் மகட்பேசினேன் வீய்ந்த பின்னர்க் கைகூடிற்றென்பதும்,

என்றுதம்மை யீன்றெடுத்தார்
வினவமறை விட்டியம்புவார்
இன்றென்றிறத்து நீர்மொழிந்தவிது
வென்பரிசுக் கிசையாது
வென்றிவிடையாரருள் செய்தா
ரொருவர்க்குரியேன் யானினிமேற்
சென்றுதிரு வொற்றியூரணைந்து
சிவனாருளிற் செல்வனென.

எனவும், கலியாணம் பேச விடுத்தவனும் வந்தவரும் இறந்தமை கேட்டு,

" நையுமுள்ளத்து டனஞ்சிநங்கை
செயலே யுடன்படுவார் "

எனவும், கூறுஞ் சேக்கிழார் திருவாக்குக்களால் அறியப்படுமாறு காண்க.

ஆகவே, தருமகட் பேசினன் என்ற அந்தாதிக்கு, தன் குலத்திற்குத் தக்க மகளை மணம் பேசினவன் இறக்க அதன் பின்னர் திருவருள் வழிச்சென்ற சங்கிலி யாரிடத்துத் தம்மிடத் துதித்த மண விருப்பால் திருவொற்றி யூரின்கண் எழுந்தருளி யிருக்கும் சிவபெருமானது மேலான மலர்போலும் திருவடிகளை வணங்கி, அவனருளால் இந்தப் பெரிய உலகத்துள்ளார் இகழும் வழக்காகிய உறுதிமொழியை மீறிச் செல்லும் முறையினை நன்மையாக மேற்கொண்டவன் நாவலூருக்கு அரசராகிய நாவலனெனப் பொருள்கொண்டு திருவருளுக்கு ஆளாக வேண்டு மென்பது இக்கட்டுரையாற் கூறப்பெற்ற பொருளாகும்.

---

# சேரமான் பெருமாள்

[அ - குமாரசுவாமிப் பிள்ளை.]

உலகோர் போற்றும் பெரும் சிறப்புப் பொருந்திய மலையமா னாட்டிற்குப் பல வளங்களால் சிறந்தோங்கிய கொடுங் கோளூரென்னும் மகோதை தலை நகராகக் கருதப்பட்டு வந்தது. அந்நகரில் சேரர் குடியிலே உலகம் செய் தவப்பயனாய் இற்றைக்கு ஓராயிரத்தி ஒருநூற் றூண்டுகளுக்கு முன் பெருமாக் கோதையாரெனும் பெரும் பெயர் படைத்த தோன்றலார் அறங் கொள் சைவ வான் பயிர் தழைத்தோங்க நன்னாளிற் றோன்றி கொல்லாமை புலாலுண்ணாமை கள்ளாமை கள்ளுண்ணாமை பிறர்மனை நயவாமை இரக்கம் வாய்மை பொறை அடக்கம் முதலியவற்றிற்கு உறைவிடமாய், தன் இரு முதுகுரவர் தம் ஏவல் பிழையாது ஒழுகிவந்தனர். இத்தகைய பண்புகளால் தலைசிறந்து விளங்கிய பெருமாக் கோதையார் "முளையும்பயிர் விளையிலே தெரியும்" என்பதற் கிலக்காய் தன் இளமைப் பருவத்திலேயே மண்மேற் சைவநெறி வாழ வளர்ந்து முன்னைவழி யன்பாற் கண்ணுதலான் கழலடியே பேணும் கருத்தினராய், உலகியல்பும் அரசியல்பும் உறுதியல்ல வென்றுணர்ந்து, திருவஞ்சைக் களம் சென்று நாடோறும் காலையிலெழுந்து புனலாடி தூநீறணிந்து, காவொடறக்குளம் தொட்டல் பூக்கொய்தல் கோதை புனைதல் அலகிடல் மெழுகிடல் பாடுதல் முதலிய திருப்பணிகளை விருப்புடனே பெருமைபெற உஞற்றிவாழ்ந்தனர்.

இது இவ்வாறாக செங்கோற்பொறையன் என்னும் சேரவேந்தன் நிலையில் வாழ்க்கையாகிய இம்மை மறுமையின்பங்களை வெறுத் தொதுக்கிப் பிறவித் துன்பங்களை அறவேயகற்ற வீட்டின் மேலாசையராகி, பிறவிக் கேதுவாகிய பயனில் முயற்சிகளை யறக்களைந்து தவமியற்றத் தவவனம் புக்கான்.

சின்னாட்கள் கழிந்த பின்னர் மதிநூல் தேர் அமைச்சரெல்லாம் ஒன்று கூடி ஆய்ந்து தெளிவடைந்து திருவஞ்சைக் களத்திலே திருத்தொண்டு செய்து கொண்டிருந்த அச்சேரர் மரபிற்கு முதல்வராகிய பெருமாக் கோதையாரிடத்திற் சென்று, இம் மலை நாட்டைத் தாங்களே மைதீர் நெறியின் முடி சூடி அரசாள வேண்டுமென வடிதொழ, கோதையாரும் குழைந்து ஈசனெவ்வழி தாசனவ்வழி நடப்ப லென்று ஆலயம் புகுந்து முறை வேண்டி யவர்மேலுள்ள காதலால் அன்பு முறை வழுவாது அரசியற்று மாண்மையும், யாரும் யாவும் கழறினவைக ளனைத்தையும் அறியு மறிவும் அழிவில்லாத தாவில் விறலும் தண்டாக் கொடையும் அரசர்க்குரிய படை குடி கூழமைச்சு நட்பு அரண் ஆதியன கைவரப் பெற்று, அஞ்சாமை ஈகை அறிவு ஊக்க மிந்நான் கையு மியல்பாக் கொண்டு தொழுது புறம் போந்து அமைச்சர் வேண்டுகோளுக்கு உடன்பட்டார். அமைச்சர்களும் பெருமிதக் களிப்புட னவாடி பணிந்து இறைஞ்சா நின்றனர்.

கோதை வள்ளலு முயிர்களுய் வான்வேண்டி நன்னாளில் நல்லோரையில் லம்பொன் மணிமுடி தாங்கி யிறைவன்

கோயில் வலம்வந்து முற்றத்துவிழுந்து வணங்கி படைகள் புடைசூழ சாமரையிரட்ட பெரும் சிறப்பொடு படுமணி யிரட்டும் படாமணிந்த யானைமீதிவர்ந்து வலம் வருங்கா லுவர் பொதிகரைந்துடல் வெளுத்து வெண்ணீறணிந்த வடியாரனையக் காணப்பட்ட வண்ணானைக்கண்டு சிவனடியாரெனவே யெண்ணி யானையினின்றுமிழிந்து அடிவணங்க, வண்ணான் நெஞ்சம் நெக்குருகி யடியேனடி வண்ணானென, சேரனும் அடியேனடிச்சேரன், நீவி ரடியார் திருநீற்று வேடத்தை மெய்ப் பித்தீராகையினால் மனம் வருந்தாதேகு மென்றார்.

மன்னர் பெருமான் திருத்தொண்டைக்கண்டமதிநீடமைச்சரெல்லாரும் சென்னிமீது கைகுவித்துப் போற்ற, சினமாக்களிறேறி மன்னுமணிப்பூண் கொடி மாடவீதி மூதூர் வலங்கொண்டு புனைமங்கலம் பொலிய பொன்னின் மணிமாளிகையில் புகுந்து யானை விட்டிழிந்து இலகுமணி மண்டபத்தின்கண் வெண் கொற்றக்குடை நிழற்ற, குவளைக் கண்ணியர் சாமரையிரட்டி மலர் தூவ, அரசர்கள் போற்ற சிங்கம் சுமந்த செழுமணித் தவிசில் வீற்றிருந்து எண்ணிலிறைவர் திறைகொணரவகத்தும் புறத்தும் பகையறுத்து தன்னால் தன் பரிசனத்தால் ஊனமிகு பகைத் திறத்தால் கள்வரா லுயிர்தம் மாலான பயமைந்தும் தீர்த்து மன்பதையைக் காத்தரசியற்று வாராயினர்.

இந்நாயனார் தனக்கு எய்ப்பினில் வைப்பாயுள்ளது தில்லை யிறைவன் திருத்தாளே யெனக் கொண்டு உள்ளன்போ டொல்லும் வாயெல்லா மோவாது வணங்கி, யிறைவர்தம் திருச்சிலம் போசை கேட்டருளப் பூத்த நெஞ்சினரா யடியார் வறியோராகியவர்களுக்கும் செம்பொன் மழை வழங்கி யிடையறாது சிவத்தொண்டிலே கண்ணும் கருத்துமா யிருந்தனர்.

இன்னணம்,

“ அறம் பொரு ளின்பமான
வறநெறி வழாமற் புல்லி
மறங்கடிந் தரசர் போற்ற
வையகம் காக்கும் நாளில் ”

ஆலவாயண்ண லன்பொடு இசையினால் தம்மைத் துதிக்கின்ற பாணபத்திரற்கு இருநிதிய முதவ கனவிற்றோன்றி, யானுனக்குப் பொன்காணப் பட்டாடை கதிர்செ யொன்பான் மணிப்பூண் மற்றும் வேண்டிற்றெல்லாம் வேண்டியவாறு குறைவின்றியீய என்பால் அன்பா லெப்பொழுதும் பரவும் சேரன்தனக் கோலைதருவோம் தாழ்க்காமல் போய்வருக வென்று,

“ மதிமலி புரிசை மாடக் கூடற்
பதிமிசை நிலவும் பானிற வரிச்சிற
கன்னம் பயில் பொழிலால வாயின்
மன்னிய சிவன்யான் மொழிதரு மாற்றம்
பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க்
குரிமையி னுரிமையி னுதவி யொளிதிகழ்
குருமா மதிபுரை குலவிய குடைக்கீழ்ச்
செருமா வுகைக்கும் சேரலன் காண்க
பண்பாலி யாழ்பயில் பாண பத்திரன்
றன்போ லென்பா லன்பன் றன்பால்
காண்பது கருதிப் போந்தனன்
மாண்பொருள் கொடுத்து வரவிடுப் பதுவே”

என்னும்பா வரைந்த திருவோலையைக் கொடுத்தனர். அவ்வோலையைப் பெற்ற பாணன் தலைமேல் சுமந்து மலைநாடெய்தி கொடுங்கோளூரை யடைந்து மன்னர் கையில் மகிழ்வுடன் கொடுக்கச் சேரனு மளவிலின்ப மெய்திக் கண்ணீரால் காலடி-



கழுவித் திருமுகத்தை ஒரு முகமாக வாசித்து அமைச்சரையறைகூவிக் கருவூலப் பொருள்களையும் கொணரச் சொல்லி பாணர்க்குப் பண்புடனீய, பாணனு மவற்றை யெல்லாம் மறுத்துத் தமக்கு வேண்டியவற்றை யானை யெருத்தம் பொலியக் கொண்டு நிலம் நெளிய மதுரையம்பதியை யடைந்தான்.

இவரிங்ஙனம் செல்ல மெய்யுறு துயரமெல்லா மகற்றி களவு கொலைகள் முதலானவை கடிந்து கழறிற்றறிவார் தாம் வளவருடன் செழியர் மகிழ வாழும் நாளில், ஒருநாள் பூசனை முடிவில் நாடோறும் கேட்கும் இறைவனது சிலம்பொலி கேளாததினால் நெஞ்சம் நைந்து உடலை வெறுத்து உயிர் துறக்க உடைவாளை உருவி மார்பின்மீது நாட்டவும், இறைவர் திருச்சிலம்பொலியைக் கேட்பித்தார். கேட்டதும் சேரர்கோன் உடைவாளை உறையின்கண் செலுத்தி அவனடி பணிந்து ‘இறைவரே! யான் நும்பால் யாது தவறிழைத்தேன்; தாங்களின்று தமியேனாகிய என்றனக்குத் திருச்சிலம் பொலியைக் கேட்பிக்கக் காலம் தாழ்த்தமையின் ஏது’ எதுவென விண்ணப்பித்து நிற்கும் காலையிலிறைவர் தம்மைத் தில்லையிலன்போடு அஞ்சொல் மலரால் அணிவித்த ‘ஆரூரரின் அன்புரையைக் கேட்டுவரத் தாழ்த்தே’மெனப் பதிலிறுத்தனர். இம்மொழியினைச் செவியேற்றச் சேரர் தில்லையை வணங்கி ஆரூரடிகளைக் காண்பான், எல்லையில்லாத அவாவுடன் வல்லையில் புறப்பட்டுச் சேர்ந்து கூத்தன் குரைகழலைப் பரவி இன்பக் கடலில் மூழ்கினவராய் “பொன் வண்ணத் தந்தாதியெனும்” அரும்பெறல் நூலை அணி மாலையாகச் சாற்றி நாளும் சிலம்போசை கேட்டு உளமகிழ்ந்தாண் டுறைந்திருந்தனர்.

சின்னாட்களாயின பின் ஆரூரரைக் காணும் பேரவாவினால் திருவாரூரை யடைந்து எதிரே சுந்தரரைக் கண்டு வணங்கச் சுந்தரரும்,

“ முன்புபணிந்த பெருமாளைத்தாமும்
பணிந்து முகந்துஎடுத்தே
அன்புபெருகத்தழுவ விரைந்தவரு
மார்வத் தொடுதழுவ
இன்பவெள்ளத் திடைநின்று
மேறமாட்டா தலைவர்போல்
என்புருகி உயிரொன்றிஉடம்பு
மொன்றுமென இசைந்தார் ”

இவ்வா றிருவருமிசையவே, அன்று முதல் சுந்தரர் “சேரமான் தோழர்” எனப் பெயர் பெற்றார். பின்னர் சேரமான், தோழருடன் கோயிலிற்புகுந்து புற்றிடங் கொண்டாரை (வன்மீகநாதரை)த் தொழுது மும்மணிக்கோவை பாடி பரவையாரில்லம் சென்றனர். செல்லவே,

“ சோதிமணி மாளிகையின்கண்
சுடருமம் பொற்காலமளி
மீதுபெருமான் தமையிருத்தி
நம்பிமேவி யுடனிருப்ப
கோதில்குணத் துப்பரவையார்
கொழுநர்க்கும் தோழர்க்கும்
நீதிவழுவா ஒழுக்கத்துநிறை
பூசனைகள் முறையளித்தார் ”

பெருமானு மிப் பூசனைகளை ஏற்று மனம் மகிழ்ந்து சுந்தரருடன் இன்புறக் கலந்துண்டு வாழ்ந்து வந்தனர். சின்னாட் கழியவே கழறிற்றறிவார் பரவையாரில்லம் நீங்கி நம்பியாரூரரோடு திருமறைக்காடெய்தி இறைவனை திருவந்தாதியால் போற்றினர். அப்பால் ஈண்டிய பெருமையையுடைய பாண்டி நன் நாட்டை யடைந்து

கூடல் முதலிய இடங்களைக் கும்பிட்டு, மீண்டும் ஆளுடைய வடிகளோடு முருகு விரியும் திருப்பரங்குன்றம், குருமணிகள் வெயிலெறிக்கும் குற்றாலம், சீராரும் செல்வத் திருநெல்வேலி இராமேச்சுரம் முதலிய இடங்களையும் கண்டிறைஞ்சி பல்லோர் எதிர் ஏற்கச்,

"சூதாரும் துணைமுலையார்
மணிவாய்க்குத் தோற்றுஇரவு
சேதாம்பல் வாய்திறக்கும்
திருவாரூர்ச் சென்றணைந்தார்"

பலநாட் சென்றபின் கார்க்கொண்ட கொடைக் கழறிற்றறிவார் பண்மயத்த மொழியினளாம் பரவையாரின் மணவாளரைத் தன்னகருக்கு எழுந்தருளும்படி வேண்ட, அவரும் உடன்பட்டு பொன்பரப்பி மணிவரன்றி புனல்பரக்கும் காவேரி ஐயாறு ஆகிய ஆறுகளை யெல்லாம் கடந்து கொடுங்கோளூரெய்தி, ஒரு மாமதி வெண்குடை நிழற்றும் வேந்தருடனே திருவமுதுண்டு இன்பக் கடலில் மூழ்கினர்.

ஒருநாள் அந்தமில் பெருமையுடைய சுந்தரர் திருவாரூரில் கோயில் கொண்டருளிய புற்றிடங் கொண்டாரை நினைந்துருகித் திருவாரூர்க்கு எழுந்தருள, உதியர் தடை செய்தும் கேளாததினால் அவர்க்கு முன்பாக அளவில்லாத அருங்கலன்களை யெல்லாம் யானைமீதேற்றி யனுப்பி யவரடி பணிந்தார். அவரும் தொழுது தழுவி செலவு பெற்று சீராரும் திருமுருகன் பூண்டி வழியாக மெய்க்கொண்ட காதலினால் விரைந்து சென்று மென்கரும்பும் செய்க்கொண்ட சாலியும் சூழ்ந்த திருவாரூரை எய்தினர். சேரரு மவரது பிரிவாற்றாமைக்கு வருந்தி சுந்தரரை மறவாதநெஞ்சினராகிக் கொடுங்கோளூரிலே அரசுபுரிந்து வந்தனர்.

சேரனைப் பிரிந்த சுந்தரர் தனது தோழரது பிரிவினால் அளவில்லாத துன்பமெய்தி யவரைக்காணப் பேரவாவொடு கொடுங்கோளூருற்று சேரமானோடும் அளவளாவி இன்பவெள்ளத்தில் திளைத்தனர். பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ?

சேரமான் பெருமாள் ஒருநாள் தூய மஞ்சன சாலையில் புகுந்து நீராடத் துணைவராகிய வன்றொண்டர் நெடுஞ்சடை யண்ணலை பண்டு தாம் பிரிந்து எய்தும் சேய நன்னெறி குறிகிட திருவஞ்சைக் களஞ்சென்று இறை பணியாற்றி அவனருளா லடைந்த யானைமீதிவர்ந்து தோழரை நினைத்துக் கொண்டே விண்ணிடைச் சென்றனர். இச்செய்தியை செவி மடுத்த சேரர் உடனே குதிரை மேலேறி அஞ்சைக் களத்தை யணுகி வீர வெண்களிறுகைத்து விண் மேற்செலும் மெய்த்தொண்டர் தமைக் கண்டு பாரில் நிற்க நெஞ்சம் பொறாது தனது குதிரையின் காதில் திருவைந்தெழுத்தை யோதக் குதிரையும் விண்ணிற்பாய்ந்து வன்றொண்டர் யானையை வலம் வந்து அதன்முன்னாலே சென்றது. அரசரது பிரிவாலடைந்தபடைத் தலைவராதியோர் தத்தம் உயிரை வாளுக்கிரையாக்கி விண்ணிலரசனைக் கண்டு பணிந்தனர். அடியார்க்கடியராகிய ஆரூரரும் கைலையையடைந்து மாசில்லா வெண்மை பொருந்திய பேரொளியானது உலகமெலாம் விரிய மெய்ம்மை வளர்கின்ற ஆசிலர் அன்பர்தமுளம்போல் விளங்கிய அணிகிளர் மணிவாயிலாகிய திருவணுக்கன் திருவாயிலை யடைந்துட் புகுந்தனர். புகுதலும் சேரமான் இறைவன் முன்னிலையில் தாமியற்றிய திருவுலாவை இறைவனுளம் மகிழப்பாடி அவனடிக்கடியாளாயினர். பின்னர் அவ்வுலா சாத்தா என்பவரால் உலகிற்கு வந்தது என்று அறவோரறைவர்.

---

# பெண்ணடியவர் மூவர்

[பண்டிதை - கிருஷ்ணவேணியம்மாள்]

(உகூஅ-ம் பக்கத் தொடர்ச்சி)

### காரைக்காலம்மையார் சரிதத்தின் அரும்பொருள்கள்

இன்னும் அம்மையார் சிவபிரான் நற்கணத்தி லொன்றாகத் தானிருக்க வேண்டுமென

"பெறினும் பிறிதியாதும் வேண்டேட நமக்கீ
தறினுமுறா தொழியுமேனுஞ்-சிறிதுணர்த்தி
மற்றொருக ணெற்றிமேல் வைத்தான்தன்
நற்கணத்தி லொன்றாய நாம்" [பேயாய

எனக் கூறியுள்ளார். இங்ஙனம் பலவாறாக சிவபிரானைத் துதித்து வழிபட்ட அம்மையார் இறைவனருள் பெற்று, அவண்விட்டு நீங்கி சிறப்பு வாய்ந்த திருவாலங் காட்டிற்குத் தலையாலே நடந்து சென்று ஆதியும் அந்தமுமில்லா சிவபிரான் மாட்டு அளப்பிலா அன்பு பெருகி "மூத்த திருப்பதிகம்" பாடி இன்புற்றிருந்தனர்.

அம்மையார் இளமை தொட்டு முடிவு வரையும் இறைவனிடத்தில் மிக்க அன்பு பூண்டொழுகினர் என்பதற்கு,

"பிறந்துமொழிபயின்ற பின்னெல்லாங்காதல்
சிறந்துநின் சேவடியே சேர்ந்தே-னிறந்திகழு
மைஞ்ஞான்றகண்டத்துவானோர்பெருமானே
யெஞ்ஞான்று தீர்ப்ப திடர்"

என அவர் பாடிய செய்யுளே காட்டாகும்.

அம்மையார் மேற் கூறிவந்த முறைகளின்படி பக்தி, ஒழுக்கங்களில் சிறந்து விளங்கினது மாத்திரமேயன்றி, கல்வியறிவிலும் மேம்பட்டவராவர். எங்ஙனமெனில் இவர் இலக்கிய இலக்கணங்களைக் கற்றுத் தெளிந்தவர் என்பதற்கு, இவர் சொற்சுவை, பொருட் சுவை தோன்ற இலக்கண அமைதியுடன் பாடிய நூல்களே சான்றாகும். சைவத்திருமக்கள் இவரை அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவராகவும், இவர் பாடிய நூல்களை பதினொராந் திருமுறையில் ஒருபகுதியாகவும் வைத்துள்ளதைக் கொண்டே இவர் சிறப்பு இத்துணையதென உணரலாம். நிற்க.

இதனால், பெண்மக்கள் அறிவிலும், இறைவனை உணரும் மெய்யுணர்ச்சியிலும் சிறந்து விளங்குவராயின், அறிவிற்சிறந்த பெரியோரால் புகழப்பட்டு பெருஞ் சிறப்பை எய்துவரென அறிகின்றோம். ஆதலால் இங்ஙனமாகிய மெய்யறிவை யடைவதற்கு நம் பெண்மக்கள் யாவரும் விரையா நிற்றல் வேண்டும். இங்ஙனமே இறைவன் அருள் புரிவாராக.

### திலகவதியார்

சிறப்பு மிக வாய்ந்ததும், நல்லொழுக்கமுடைய குடிகளால் நிரம்பப் பெற்றதுமான திருமுனைப்பாடி நாட்டின் ஓர் பகுதியிலே நீர்வளம், நிலவளம் முதலிய பல வளங்களும் வாய்க்கப்பெற்ற திருவாமூர் என்னும் ஓர் ஊர் உளது. இவ்வூரில் வேளாளர் மரபில் சிவபிரான்மாட்டு மெய்யன்பு பூண்டொழுகா நின்ற "புகழனார்" என்னும் பெயரிய ஓர் சான்றோர்

கூடல் முதலிய இடங்களைக் கும்பிட்டு, மீண்டும் ஆளுடைய வடிகளோடு முருகு விரியும் திருப்பரங்குன்றம், குருமணிகள் வெயிலெறிக்கும் குற்றாலம், சீராரும் செல்வத் திருநெல்வேலி இராமேச்சுரம் முதலிய இடங்களையும் கண்டிறைஞ்சி பல்லோர் எதிர் ஏற்கச்,

“ சூதாரும் துணைமுலையார்
 மணிவாய்க்குத் தோற்றுஇரவு
சேதாம்பல் வாய்திறக்கும்
 திருவாரூர்ச் சென்றணைந்தார் ”

பலநாட் சென்றபின் கார்க்கொண்ட கொடைக் கழறிற்றறிவார் பண்மயத்த மொழியினளாம் பரவையாரின் மணவாளரைத் தன்னகருக்கு எழுந்தருளும்படி வேண்ட, அவரும் உடன்பட்டு பொன்பரப்பி மணிவரன்றி புனல்பரக்கும் காவேரி ஐயாறு ஆகிய ஆறுகளை யெல்லாம் கடந்து கொடுங்கோளூரெய்தி, ஒரு மாமதி வெண்குடை நிழற்றும் வேந்தருடனே திருவமுதுண்டு இன்பக் கடலில் மூழ்கினர்.

ஒருநாள் அந்தமில் பெருமையுடைய சுந்தரர் திருவாரூரில் கோயில் கொண்டருளிய புற்றிடங் கொண்டாரை நினைந்துருகித் திருவாரூர்க்கு எழுந்தருள, உதியர் தடை செய்தும் கேளாததினால் அவர்க்கு முன்பாக அளவில்லாத அருங்கலன்களை யெல்லாம் யானைமீதேற்றி யனுப்பி யவரடி பணிந்தார். அவரும் தொழுது தழுவி செலவு பெற்று சீராரும் திருமுருகன் பூண்டி வழியாக மெய்க்கொண்ட காதலினால் விரைந்து சென்று மென்கரும்பும் செய்க்கொண்ட சாலியும் சூழ்ந்த திருவாரூரை எய்தினர். சேரருமவரது பிரிவாற்றாமைக்கு வருந்தி சுந்தரரை மறவாதநெஞ்சினராகிக் கொடுங்கோளூரிலே அரசுபுரிந்து வந்தனர்.

சேரனைப் பிரிந்த சுந்தரர் தனது தோழரது பிரிவினால் அளவில்லாத துன்பமெய்தி யவரைக்காணப் பேரவாவொடு கொடுங்கோளூருற்று சேரமானோடும் அளவளாவி இன்பவெள்ளத்தில் திளைத்தனர். பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ?

சேரமான் பெருமாள் ஒருநாள் தூய மஞ்சனை சாலையில் புகுந்து நீராடத் துணைவராகிய வன்றொண்டர் நெடுஞ் சடை யண்ணலை பண்டு தாம் பிரிந்து எய்தும் சேய நன்னெறி குறிகிட திருவஞ்சைக் களஞ்சென்று இறைபணியாற்றி அவனருளா லடைந்த யானைமீதிவர்ந்து தோழரை நினைத்துக் கொண்டே விண்ணிடைச் சென்றனர். இச்செய்தியை செவி மடுத்த சேரர் உடனே குதிரை மேலேறி அஞ்சைக் களத்தை யணுகி வீர வெண்களிறுகைத்து விண் மேற் செலும் மெய்த்தொண்டர் தமைக் கண்டு பாரில் நிற்க நெஞ்சம்பொறுது தனது குதிரையின் காதில் திருவைந்தெழுத்தை யோதக் குதிரையும் விண்ணிற்பாய்ந்து வன்றொண்டர் யானையை வலம் வந்து அதன்முன்னாலே சென்றது. அரசரது பிரிவாலடைந்தபடைத் தலைவராதியோர் தத்தம் உயிரை வாளுக்கிரையாக்கி விண்ணிலரசனைக் கண்டு பணிந்தனர். அடியார்க்கடியனாகிய ஆரூரரும் கைலையையடைந்து மாசில்லா வெண்மை பொருந்திய பேரொளியானது உலகமெலாம் விரிய மெய்ம்மை வளர்கின்ற ஆசிலர் அன்பர்தமுளம்போல் விளங்கிய அணிகிளர் மணிவாயிலாகிய திருவணுக்கன் திருவாயிலை யடைந்துட் புகுந்தனர். புகுதலும் சேரமான் இறைவன் முன்னிலையில் தாமியற்றிய திருவுலாவை இறைவனுளம் மகிழப்பாடி அவனடிக்கடியாளாயினர். பின்னர் அவ்வுலா சாத்தா என்பவரால் உலகிற்கு வந்தது என்று அறவோரறைவர்.

# பெண்ணடியவர் மூவர்

[பண்டிதை - கிருஷ்ணவேணியம்மாள்]

(௨௯௮-ம் பக்கத் தொடர்ச்சி)

## காரைக்காலம்மையார் சரிதத்தின் அரும்பொருள்கள்

இன்னும் அம்மையார் சிவபிரான் நற்கணத்தி லொன்றாகத் தானிருக்க வேண்டுமென

“பெறினும் பிறிதியாதும் வேண்டேம் நமக்கீ
தறினுமுற தொழியுமேனுஞ்-சிறிதுணர்த்தி
மற்றொருக னெற்றிமேல் வைத்தான்தன்
நற்கணத்தி லொன்றாய நாம் ” [பேயாய

எனக் கூறியுள்ளார். இங்ஙனம் பலவாறாக சிவபிரானைத் துதித்து வழிபட்ட அம்மையார் இறைவனருள் பெற்று, அவணிவிட்டு நீங்கி சிறப்பு வாய்ந்த திருவாலங் காட்டிற்குத் தலையாலே நடந்து சென்று ஆதியும் அந்தமுமில்லா சிவபிரான் மாட்டு அளப்பிலா அன்பு பெருகி “ மூத்த திருப்பதிகம் ” பாடி இன்புற்றிருந்தனர்.

அம்மையார் இளமை தொட்டு முடிவு வரையும் இறைவனிடத்தில் மிக்க அன்பு பூண்டொழுகினர் என்பதற்கு,

“ பிறந்துமொழிபயின்ற பின்னெல்லாங்காதல்
சிறந்துநின் சேவடியே சேர்ந்தே-னிறந்திகழு
மைஞ்ஞான்றகண்டத்துவானோர்பெருமானே
யெஞ்ஞான்று தீர்ப்ப திடர் ”

என அவர் பாடிய செய்யுளே காட்டாகும்.

அம்மையார் மேற் கூறிவந்த முறைகளின்படி பக்தி, ஒழுக்கங்களில் சிறந்து விளங்கினது மாத்திரமேயன்றி, கல்வியறிவிலும் மேம்பட்டவராவர். எங்ஙனமெனில் இவர் இலக்கிய இலக்கணங்களைக் கற்றுத் தெளிந்தவர் என்பதற்கு, இவர் சொற்சுவை, பொருட் சுவை தோன்ற இலக்கண அமைதியுடன் பாடிய நூல்களே சான்றாகும். சைவத்திருமக்கள் இவரை அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவராகவும், இவர் பாடிய நூல்களை பதினொராந் திருமுறையில் ஒருபகுதியாகவும் வைத்துள்ளதைக் கொண்டே இவர் சிறப்பு இத்துணையதென உணரலாம். நிற்க.

இதனால், பெண்மக்கள் அறிவிலும், இறைவனை உணரும் மெய்யுணர்ச்சியிலும் சிறந்து விளங்குவராயின், அறிவிற்சிறந்த பெரியோரால் புகழப்பட்டு பெருஞ் சிறப்பை எய்துவரென அறிகின்றோம். ஆதலால் இங்ஙனமாகிய மெய்யறிவை யடைவதற்கு நம் பெண்மக்கள் யாவரும் விரையா நிற்றல் வேண்டும். இங்ஙனமே இறைவன் அருள் புரிவாராக.

## திலகவதியார்

சிறப்பு மிக வாய்ந்ததும், நல்லொழுக்கமுடைய குடிகளால் நிரம்பப் பெற்றதுமான திருமுனைப்பாடி நாட்டின் ஓர் பகுதியிலே நீர்வளம், நிலவளம் முதலிய பல வளங்களும் வாய்க்கப்பெற்ற திருவாமூர் என்னும் ஓர் ஊர் உளது. இவ்வூரில் வேளாளர் மரபில் சிவபிரான்மாட்டு மெய்யன்பு பூண்டொழுகா நின்ற “ புகழனார் ” என்னும் பெயரிய ஓர் சான்றோர்

கும் சிவபிரானிடத்துப் பேரன்பு மிக, திருவீரட்டானஞ் சேர்ந்து அங்குள்ள கோயிலை அணுகி செம்பவளக் குன்றனைய சிவபிரானை அடிதொழுது அன்று முதல் இறைவன்மாட்டு மிக்க அன்பு பூண்டாராய் திருக்கோயிலை அலகிடுதல், மலர்மாலை தொடுத்து சிவபிரானுக்குச் சூட்டுதல் முதலிய திருப்பணிகளைச் செய்து பார்வதி நாதனை உள்ளன்புடன் பணிந்து வந்தனர்.

இங்ஙனம் அம்மையார் மெய்ந்நெறியைக் கைக்கொண்டு மனந் தூயராய் ஒழுகிவரினும்,

"ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும்"

என்றவாறு தம்பின்னவர், பழையவினை தன்னை உந்த தன் மூத்தோர்கள் மேற்கொண்டொழுகியதும், தன் இளமையிலிருந்தே தான் பழகிவந்ததும், உண்மை யன்புடன் ஒழுக வல்லார்க்குப் பேரின்பப் பேற்றை யளிக்கக் கூடியதுமான சைவ நெறியைக் கைவிட்டுப் பரசமயத்தை யணுகியமைக்குப் பெரிதும் வருந்தினர். ஆதலால் அவர் சிவபிரானைநோக்கி என் ஐயனே! அக்கத்தில் பாயிடுக்குதலும், மயிர் நீக்குதலும், நின்று உண்ணுதலும் ஆகிய பயனற்ற இக் காரியங்களையே தவமெனக் கருதி இறைவனை யடைவதற்காகிய சிறந்த வழிகளில் செல்லாத சமண் சமயத்திலிருந்து என் பின்னோனை மீட்கவேண்டுமென இறைஞ்சி நின்றனர்.

அடியாரின் வினைகளை யறுக்கும் சிவபிரான் அம்மையாரின் வேண்டுகோளுக்கிரங்கி, அவர் கனவிற்றோன்றி "அன்பிற் சிறந்த அம்மையே! உன் உடன்பிறந்தான் முன்னமே முனியாகி எனை யடையத் தவ முயன்றான். ஆதலால் அவனுக்குச் சூலைநோயைத்தந்து ஆட்படுத்துவோம்; நீ கவலை யொழிக" எனத் திருவாய் மலர்ந்தருளினர். இவ்வருண்மொழியைக் கேட்ட அம்மையார் ஒருவாறு மனந்தேறி யிருந்தனர்.

சமணருக்குத் தலைவராய் சமண் பள்ளியில் வதிந்துவந்த மருணீக்கியாருக்குத் திடீரென ஆற்றொணாத் துன்பத்தைத் தரும் சூலைநோய் வந்தணுகி வடகனலும், கொடுவிடமும், வச்சிரமும் வயிற்றுக்குள் நுழைந்தெதென அவர் குடரை முறுக்கிப் பெரிதும் துன்புறுத்தியது. அதனால் அவர் பெரிதும் வருந்தி நஞ்சு தலைக்கேறினவர் போன்று மயங்கி நிலத்தில்வீழ்ந்தனர். இதையுணர்ந்த சமணர், நாம் ஒருபோதும் முன் கண்டறியா விடம்போன்ற இந்நோய் இவருக்கு வந்துற்றதின் காரணம் யாதோவென மயங்கினராய், குண்டிகைநீர் மந்திரித்துத் தந்தும், பீலிகொடு உடம்பு முழுதும் தடவியும், பல மந்திர மொழிகளைக் கூறியும் அந்நோய் சிறிதும் குறையாமல் அதிகப்படுவதை யுணர்ந்த சமணர்கள் இனி என் செய்வோமென அறியாது தியங்கினராய் அவரைக் கைவிட்டுச் சென்றனர்.

இங்ஙனம் சமணர்கள் தன்னை விட்டுச் சென்றபின் சூலை நோய் சிறிதும் குறையாது அதிகமாய்த் துன்புறுத்தத் தன்னை ஆதரிப்பார் ஒருவருமின்றி மயங்கினராய் முன்னை செய்த நல்வினை வந்தணுகுங் காலஞ் சமீபித்தமையின், தன் தமக்கையின் நினைவு கூரத் தன் நிலைமையைத் தமக்கையாருக்குத் தெரிவித்து வரும்படி ஒரு தூதனுப்பினர். சென்றவர் திரு



வதிகை பூஞ்சோலையின்கண் தவத்திற் சிறந்த திலகவதியாரைக் கண்டு வணங்கி 'உமக்கிளையவர் அனுப்ப இங்கு வந்தேன்' எனத் தெரிவித்தனர். இதைக்கேட்ட அம்மையார் 'அவர்க் கேதேனும் கெடுதியுளதோ' வென, 'கொடிய சூலைநோயினால் சொல்லொணாத் துயருறுகின்றார், இதைப் போக்குதற்கு அமணர் பல்வகையில் முயற்சித்தும் பயன் படாமையால் அவர்கள் தருமசேனரைக் கைவிட்டு நீங்கினர். இவ்விடயத்தை உமக்குத் தெரிவித்து ஏதேனும் தான் உய்யும் வழியை உம்மிடம் கேட்டறிந்து பொழுதுபடுதற்குள் என்னை அங்கு வரும்படி கட்டளையிட்டனர்' எனக் கூறி நின்றார். இதைச் செவிமடுத்த அம்மையார் "நன்மார்க்க மறியா சமணர் பதிக்கு யான் அணுகேன்" என மொழிய, வந்தவர் சென்று அம்மையார் கருத்தைத் தருமசேனருக்குத் தெரிவித்தனர்.

இதைக் கேட்ட மருணீக்கியார் இதற்கென் செய்வேன் என அயர்வெய்தி, இறைவனருள் கைக் கூடுங் காலம் நெருங்குதலால், இப்புன் சமயச் செய்கையினால் நீங்கப்பெறாத இந்நோயைத் தீர்த்துக்கொள்ள என் தமக்கையார் கழலடைவேனெனக் கூறிச் சமணரின் பொருள்களாகிய பாய், குண்டிகை, பீலி முதலியவைகளை அப்பள்ளியினிடமே வைத்துவிட்டு, வெள்ளை ஆடையை யுடுத்து ஒருவருங் காணாதவாறு இரவின்கண் அவண் நீங்கித் திருவதிகையில் சிவனருள் நிரம்பப்பெற்ற திலகவதியாரிருந்த திருமடத்தை வந்தடைந்தார்.

மடத்தைவந் தடைந்த மருணீக்கியார் திலகவதியார் திருவடியில் வணங்கி, நம் குலத்தின் தவப்பயனுக் கொப்பானவரே! தமியேன் உடல் கொடிய சூலை நோயினால் மிக வருந்துகிறது, இதிலிருந்தும் உய்யும் வழியை அருளல்வேண்டும்" என வேண்டினர். திலகவதியார் தன் பின் பிறந்தாரை நோக்கி, "நம் பெரியோரால் கொள்ளப்பட்டதும் நாம் தூய்மை யடைவதற்குக் காரணமாயுள்ளதுமான சைவமதத்தைவிட்டுச் சமண மதத்தை யடைந்த உன்னை நல்வழிப் படுத்தற்பொருட்டே சிவபிரான் தம் அருளால் இத்துன்பத்தை உனக்களித்தனர். ஆதலால் மனத் தூய்மையுடையாரின் பற்றறுக்கும் கற்றை வேணிப் பிரான் தமைப் பணிந்து அவருக்குப் பணி செய்வாயாயின் இந்நோய் விலகப்பெறும்" எனக்கூறித் திருக் கயிலைபிரான் திருநீறு அஞ்செழுத்தை யோதி அவர்க்குக் கொடுத்தார். மருணீக்கியார் தன் தமக்கையைப் பணிந்து அத் திருநீற்றை மிக வணக்கத்துடன் வாங்கித் தன் தேகமுழுதும் பூசிக் கொண்டனர். திருநீறணிந்த மருணீக்கியார் அகத்திருள் நீங்கியது போன்று, புறத்திருளாகிய இரவும் நீங்கிட, தன் தமக்கையாருடன் திருவீரட்டானக் கோயிலுட் சென்று அங்கு எழுந்தருளியுள்ள சிவபிரானை நிலமுற வீழ்ந்து வணங்கி, "கூற்றாயினவாறு" என்னும் திருப்பதிகத்தைப் பாடி, கூற்றினுங் கொடிதாய்த் தன்னை வருத்தி வந்த நோய் நீங்கப் பெற்று, அன்று முதல் சிவபிரானை உள்ளங்கனிந்து பாடும் பேராற்றலும் பெற்று, சிவபிரானருளால் பல்லோர் புகழ, பல அருட் செய்கைகளையுஞ் செய்து திருநாவுக்கரசர் என்றும், அப்பர் என்றும் பெயர்தாங்கி தம்

பின் வருவார்க்கு அழியாத பெரும் நிதியாகிய மூன்று திருமுறைகளை அருளிச்செய்து வைத்துப் பல திருப்பதிகளுக்கும் சென்று இறைவன் அருள் பெற்று, மானிடப் பிறவிக்கேற்ற பயனடைந்து சிவபிரான் திருவடிநிழலை யடைந்தனர். சிவபிரானருள் மிகப்பெற்ற திலகவதியாரும் அக்கோயிலிலேயே திருப்பணிசெய்து கொண்டிருந்து தாம் கருதிய தவம் முற்றுப்பெற இறைவனருட் பேற்றைச் சென்றடைந்தனர்.

---

# தமிழ்ப்புலமை

[யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலரவர்கள் இராமநாதபுரம் பொன்னுச்சாமித் தேவரவர்கள் உதவிபெற்றுத் திருக்கோவையாருரை முதற்பதிப்பு வெளியிட்ட காலத்தில் (ரௌத்திரி ஐப்பசி கி. பி. 1860) தம் பதிப்பிற்கு அநுபந்தமாகத் 'தமிழ்ப்புலமை' யென்னுந் தலைப்போடு தமிழ் நூல்கள் கற்கு மொழுங்கினை எழுதிப் பதிப்பித்தனர். எக்காரணத்தாலோ பிற்காலத்து வெளிவந்த பதிப்புக்களில் அது விடப்பட்டது. தமிழ்ப் புலமையைப்பற்றி நாவலரவர்கள் கொள்கையை யறிதற்கு அஃதேதுவா யிருத்தலால் இங்கு அதனைப் பதிப்பிக்கிறோம். அதனைச்சார அவர்கள் பதிப்பித்திருந்த "தமிழ்ப் புத்தகங்கள்" என்னும் குறிப்பையும் சேர்கின்றோம்.]

௧. தமிழ் கற்கப்புகுஞ் சைவசமயிகள் முன்னர்ப் பாலபாடங்களைப் படித்துக்கொண்டு, இலக்கணச் சுருக்கத்தைக் கற்றறிந்து, இயன்ற அளவு பிழையில்லாமல் எழுதவும் பேசவும் பழகுக.

௨. நிகண்டு கற்று, அதனுள் அடங்கிய சொற்களையும் அவைகளின் பொருள்களையும் அறிந்துகொள்க.

௩. திருவள்ளுவர் குறள், நாலடியார் முதலாகிய நீதிநூல்களைப் பதப்பொருளுடனே கற்றறிந்து கொள்க.

௪. சமயதீக்ஷை பெற்றுக்கொண்டு, சைவர்களுக்கு இன்றியமையாச் சிறப்பினவாகிய தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு என்னும் அருட்பாக்களைப் பண்ணுடன் ஓதவும், சுத்தாங்கமாக ஓதவும் பழகிக்கொள்க.

௫. பெரியபுராணம், திருவிளையாடற்புராணம், திருவாதவூரடிகள் புராணம், கந்தபுராணம், உபதேசகாண்டம், கோயிற்புராணம், காசிகாண்டம், கூர்மபுராணம், சேதுபுராணம், காஞ்சிப்புராணம், திருத்தணிகைப் புராணம், பதினொராந்திருமுறையிற் பிரபந்தங்கள், குமரகுருபர சுவாமிகள் அருளிச்செய்த பிரபந்தங்கள் முதலாகிய இலக்கியங்களை ஆராய்ந்தறிக.

௬. நன்னூல் விருத்தியுரை, அகப்பொருள் விளக்கவுரை, புறப்பொருள் வெண்பா மாலையுரை, காரிகையுரை, வெண்பாப் பாட்டியலுரை, தண்டியலங்காரவுரை என்னும் இலக்கணங்களைக் கற்றறிந்து, தாம் கற்ற இலக்கியங்களில் இவ்விலக்கண விதிகளை அமைத்துப் பழகுக.

௭. இன்னும், காலம் உளதாயின், தொல்காப்பியம் இளம்பூரணருரை, சேனாவரையருரை, நச்சினார்க்கினியருரை, பிரயோகவிவேகவுரை, இலக்கணக்கொத்துரை, தொல்காப்பியச் சூத்திர விருத்தி, இறையனாரகப்பொருளுரை என்னும் இலக்கணங்களையும் கற்றறிக.



௮. பூகோள நூல், ககோள நூல், அங்ககணிதம், வீசகணிதம், க்ஷேத்திர கணிதம் என்னும் நூல்களைக் கற்றறிக.

௯. தருக்கநூல்களைக் கற்றறிந்து, எடுத்த விடயத்தை நியாயம் வழுவாமல் எழுதவும் பேசவும் பழகுக.

௧௦. திருவள்ளுவர் குறள், பரிமேலழகருரை, திருச்சிற்றம்பலக்கோவையார் நச்சினார்க்கினியருரை, கல்லாடம் நச்சினார்க் கினியருரை என்பனவற்றைக் கற்று, இடைவிடாது பலகாலும் உளங்கொளப் பயிலுக.

௧௧. விசேஷ தீக்ஷை பெற்றுக் கொண்டு, சைவசமயநெறியுரை, சிவதருமோத்தர வுரை, பரமத திமிர பானு, சதுர்வேத தாற்பரிய சங்கிரகம் முதலாகிய சமயநூல்களைக் கற்றறிக.

௧௨. கல்விக்குப் பயன் அறிவும் அறிவுக்குப் பயன் ஒழுக்கமுமாம். ஆதலால் தம் வாழ்நாள் முழுதும், சிவநிந்தை, குருநிந்தை, சிவனடியார் நிந்தை, வேதாகம நிந்தை, சிவத்திரவியங் கவர்தல், கொலை, களவு, புலாலுணல், கள்ளருந்தல், பிறர்மனை விழைதல், வரைவின் மகளிர் விழைதல், பொய், அழுக்காறு, புறங்கூறல், செய்ந்நன்றி மறத்தல் முதலாகிய பாவங்களை ஒழித்து, சிவத்தியானம், சந்தியாவந்தனம், பஞ்சாக்ஷர செபம், சிவபூசை, தமிழ்வேத பாராயணம், சிவாலயசேவை, மகேசுர பூசை, தீக்ஷாகுரு வித்தியாகுரு, தந்தை தாய் தமையன் முதலிய பெரியோர்களை வழிபடுதல், இரக்கம், பொறை, அடக்கம் முதலாகிய புண்ணியங்களை உடையராய் ஒழுகுக.

௧௩. இருமை யின்பத்துக்கும் துணைக்காரணமாகிய பொருளை, பிறவுயிர்களுக்குச் சிறிதாயினும் கேடு பயவாத நல் வழியாலே ஈட்டுக.

௧௪. நித்திய கருமத்துக்கும் பொருளீட்டுதலுக்கும் உரியகாலம் அல்லாத மற்றக் காலமெல்லாம், சிறிதும் வீண்படாமல், புண்ணிய நூல்களை ஆராய்தலிலும், நன் மாணாக்கர்களுக்குக் கல்வி கற்பித்தலிலும், பலருக்குப் பயன்படும் நூல்களையேனும் உரைகளையேனும் செய்தலிலும் போக்குக.

௧௫. இவ்வாறே கல்வி யறிவொழுக்கங்களிற் சிறந்து விளங்கும் பரிபக்குவர்கள் சற்குருவை அடைந்து, நிருவாண தீக்ஷை பெற்றுக் கொண்டு, ஞான சாத்திரங்களாகிய (௧) திருவுந்தியார், (௨) திருக்களிற்றுப்படியார், (௩) சிவஞானபோதம், (௪) சிவஞான சித்தியார், (௫) இருபாவிருபது, (௬) உண்மை விளக்கம், (௭) சிவப்பிரகாசம், (௮) திருவருட்பயன், (௯) வினாவெண்பா, (௧௦) போற்றிப் பஃறொடை, (௧௧) கொடிக்கவி, (௧௨) நெஞ்சுவிடுதூது, (௧௩) உண்மை நெறி விளக்கம், (௧௪) சங்கற்ப நிராகரணம் என்னும் சைவ சித்தாந்த நூல்களை உரையுடனே விதிப்படி சிரத்தையோடுங் கற்றறிந்து கொண்டு, இச்சாத்திரங்களின் அனுபவப் பயனாய் உள்ள தோத்திர வடிவாகிய மேற்கூறப்பட்ட தேவாரம், திருவாசகம், திருக்கோவையார், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு என்னும் அருட்பாக்களின் உண்மைப் பொருளைச் சிவனது திருவருள் காட்டக்கண்டு, நின்றாலும், இருந்தாலும், கிடந்தாலும், நடந்தா

னும் நெஞ்சநெக்குருக, கண்ணீர்வார, மெய்ம்மயிர் சிலிர்ப்ப, சிறிதும் மறவாது அச்சிவனது திருவடிக்கீழ்த் தூங்கும் உண்மை நிலையைப் பெற்று வாழ்க.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக."

"கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றா டொழாஅ ரெனின்."

"நின்று மிருந்துங் கிடந்து நடந்து நினை
என்றுஞ் சிவன்றா ளிணை."

குறிப்பு :—வைணவ சமயிகள் மேற் கூறப் பட்டவற்றுள் சமய நூல்களொழித்து ஒழிந்தனவற்றையும் தங்கள் சமய சித்தாந்தங்களையும் கற்றறிந்து, அவைகளின் விதிப்படி ஒழுகுக.

தமிழ் கற்றவர்களை நடுவு நிலைமையின் வழுவாது பரீக்ஷை செய்து, அதில் வல்லவர்களென நன்கு மதிக்கப்பட்டவர்களுக்கு அவரவர் தகுதிக்கேற்ற பெயரும் சின்னமும் கொடுக்கும் சபையார் இக்காலத்தில் இல்லாமையால், தமிழ்க் கல்வியில் வல்லவர்களும் வல்லவர்களல்லாதவர்களும் ஒப்ப மதிக்கப் படுகிறார்கள். அதனால் நமது தேசத்தாருக்குத் தமிழ்க் கல்வியில் விருப்பமும் முயற்சியும் சிறிதாயினும் இலவாயின. பண்டுதொட்டுக் கல்வியிற் சிறப்புற்று விளங்கும் மகிமை பொருந்திய மடாதிபதிகள் பெருங் கருணை கூர்ந்து, காலந்தோறும், தமிழ்க் கற்றவர்களுள் தங்கள் சந்நிதானத்துக்கு விண்ணப்பஞ் செய்து கொண்டவர்களைப் பரீக்ஷை செய்து, வல்லவர்களென நன்கு மதிக்கப்பட்டவர்களுக்கு அவரவர் தகுதிக்கேற்ற பெயரும் சின்னமும் கொடுத்தருளுவார்களாயின், எம்மொழியினும் இனிய நமது தமிழ்மொழி மிக வளர்ந்தோங்குமே. ஏழை சொல் அம்பலத்துக் கேறுமா! ஐயையோ! இதற்கு யாது செய்யலாம்.

### தமிழ்ப் புத்தகங்கள்

க. முற்காலத்தில் உள்ள மகிமை பொருந்திய புலவர்களாலே தமிழிற் செய்யப்பட்ட நூல்களுள்ளும் உரைகளுள்ளும் அளவில்லாதவைகள், அச்சிற் பதிப்பிக்கும் வழக்கம் இல்லாமையால் இறந்துபோயின. இறவாது இக்காலத்தில் எஞ்சியிருப்பவைகளும் கையெழுத்துப் பிரதிகளிலே எழுத்தும் சொல்லும் மிகுந்தும் குறைந்தும் பிறழ்ந்தும் திரிந்தும் பலவாறு பிழைபட்டனவாய், சிலவிடங்களில் மாத்திரம் அருகி வழங்குகின்றன. அவைகளுள் யாதாயினும் ஒன்றைக் கற்க விரும்புவோர் அஃது இருக்கும் இடம் ஆராய்ந்தறிதல் அரிது. அறிந்தாலும், பெறுதல் அரிது. நெடுநாளாகச் செய்த பெரும் முயற்சியினாலே பெற்றாலும், எழுதவல்லார் கிடைத்தல் அரிது. கிடைத்தாலும், எழுத்துக்கூலி மிகப் பெரிதாதலால் எழுதுவித்துக் கொள்ளுதல் அரிது. எழுதுவித்துக் கொண்டாலும், ஒத்துப் பார்வையிட்டுக் கொள்ளுதல் அரிது. ஒத்துப்பார்வையிட்டுக் கொண்டாலும், கற்கும்போது பிழையற ஓதுதலும் பொருள் துணிதலும் கூடாமையால் விளையும் வருத்தம் மிகப் பெரிது. ஒரு நூலைக் கற்றற்கே இப்படிக் காலநீட்டமும் பெருமுயற்சியும் பொருட் செலவும் வருத்தமும் உளவாமாயின், சில வாழ்நாளையும் அதற்குள்ளே பல பிணிகளையும் கவலைகளையு முடைய சிற்றறிவின



ராகிய மனிதர்கள் சில காலத்திலே பல நூல்களைக் கற்று வல்லராதல் எப்படி! இதனாலன்றோ, நமது தேசத்தாருக்குத் தமிழ்க் கல்வியிலே விருப்பமும் முயற்சியும் வரவரக் குன்றுகின்றன. இவ்வேதுவினால், இப்பொழுது எஞ்சியிருக்கும் நூல்களும் விரைவின் இறந்துவிடு மென்பதற்கு ஐயமில்லை. ஆதலால், யாவருக்கும் எளிதிற் பயன்படும் பொருட்டு, முக்கியமாய் உள்ள நூல்களையும் உரைகளையும் பலவிடங்களினின்றும் வருவிக்கப் பட்ட பல பிரதி ரூபங்களைக் கொண்டு ஒருவாறு பரிசோதித்து அச்சிற் பதிப்பித்துப் பிரகடனஞ் செய்தல் வேண்டும்.

உ. செய்யுள் வடிவாகிய நூல்களும் அவைகளின் உரைகளும் கற்று வல்லவர் சிலருக்கன்றி மற்றவர்களுக்குப் பயன்படாவாம். ஆதலால் விவேகமில்லாதவர்களுக்கும், விவேகமுள்ளவர்களுள்ளும் ஆங்கில பாஷையைக் கற்றலிலும் லௌகிகங்களைச் செய்தலிலும் தங்கள் காலத்தைப் பெரும்பான்மையும் போக்குகிறவர்களுக்கும், பெண்களுக்கும் எளிதிற் பயன்படும் பொருட்டு, நீதிநூல்களையும், சரித்திரங்களையும், சமய நூல்களையும், லௌகிக நூல்களையும் வெளிப்படையாகிய வசன நடையிற் செய்து, அச்சிற் பதிப்பித்துப் பிரகடனஞ் செய்தல் வேண்டும்.

கல்விப் பொருளோடு செல்வப் பொருளும் ஒருங்குடைய மகிமை பொருந்திய மடாதிபதிகளும் பிரபுக்களும் நமது தமிழ் நாட்டிலும் தமிழ்ப் பாஷையிலும் அபிமான முடையர்களாகி, தங்கள் தங்களால் இயன்ற உதவி செய்து, இம்முயற்சிகளை நிறைவேற்றுவார்களாயின், நமது நாட்டிலே எம்மொழியினும் இனிய நமது தமிழ் மொழி வளர்ந்தோங்குமே.

திருக்கோவையாருரை பதிப்பித்துப் பிரகடனஞ் செய்தற்கு உதவி செய்த கல்வியறி வொழுக்கங்களான்ற ம-ா-ா-ஸ்ரீ பொன்னுசாமித் தேவ ரவர்களுடைய பெருந்தகைமையை நான் பாராட்டுதல் போலவே, அதனைக் கற்போர் யாவரும் மிக்க உவகையோடு பாராட்டுவார்களென்று நம்புகிறேன். முற் காலத்திலே பாண்டியர்களைப் போல இக்காலத்திலே இப்பிரபு அவர்கள் தமிழை வளர்ப்பார்களென்று உறுதியாகக் கருதி யிருக்கின்றேன்.

"செந்தமிழ்ச் செல்வி."

---

# முத்தி எப்பொழுது?

[ஜே. என். இராமநாதண்]

உலகெலாம் பரவியுள்ள பல்வேறு மதங்களைவிட சைவம் ஒன்றே சிற்றறிவுக்கும், பகுத்தறி வுக்கும், பேரறிவுக்கும், ஆராய்ச்சிக்கும், தற்கால தாவர ரசாயன நூல் முடிவான கொள்கை களுக்கும் பொருத்த முடைத்தென்று நான் திண்ணமாக எண்ணங்கொண்டுள்ளேன்.

முத்தி என்ன என்பதைப்பற்றியும், அதனை யடைவதெப்படி யென்பதைப்பற்றியும் ஈண்டு விளக்க நான் எண்ணவில்லை. ஆனால் முத்தி எப்பொழுது ஒருவன் அடைவது என்பதைப்பற்றிய சைவக் கொள்கையை ஆராய்வேன்.

முத்தி யென்பது விதேக முத்தி யென்றும், ஜீவன் முத்தியென்றும் இருவகையாக மக்கள் வழக்கத்தில் எண்ணிக் கொண் டிருக்கிருர்கள். விதேகமுத்தி யென்ருல், ஒருவர், அல்லது உடல் பெற்ற ஒரு ஆன்மா, தன் உடலைவிட்டுப் பிரிந்து (என்ருல் இறந்த பிறகு) தான்மட்டும் (என்ருல் ஆன்மா மட்டும்) வேறு பிறவி யெடுக்காமல் முத்தியடைந்து விடுவது. ஜீவன் முத்தியென்ருல், தான் பெற்றுள்ள உடலுடனே முத்தியடைவது என்ருல் இறந்து போகாமலும், உடலை விட்டு ஆன்மா பிரியாமலும், தான் பெற்ற இந்தப் பிறவியிலேயே முத்தியடைவது. பொந்தியோடு கைலாயம் போதல் என்றுங் கூறுவார்கள் ஜீவன் முத்தியை.

முத்தியில் மலம் நீங்கியிருப்பதாகக் கொள்ளும் வழக்கம் பல சைவசித்தாந்திகளுக் குண்டு. முத்தியிலே மாயாமலமும், கன்மமலமும் அழிந்து (நீங்கி) ஆணவமலம் மாத்திரம் தூர விலகி செயலற்று நிற்பதாக வழக்கமாகக் கொள்கிருர்கள். தூரம் என்ருல் எவ்வளவு தூரம்? அந்த தூரத்தை இத்தனை அடி, முழம் என்று அளக்கமுடியுமா? அல்லது ஆணவ மலம் செயலற்றிருப்பதாகச் சொல்வதற்கு சித்தாந்த சாத்திரங்களில் ஆதாரமுண்டா? அல்லது ஆணவ மலமும் அழிந்து விடுகிறதா? ஆணவ மலமும் அழிந்து விடுவதானுல் முப்பொருளுண்மைக்கு முரண் ஏற்படுகிறதல்லவா? முத்தியிலும் மலத்திற்கு ஒரு செயல் சித்தாந்த சாத்திரங் கூறுகிறதே!

பதினன்கு சித்தாந்த சாத்திரங் களில் ஒன்ருகிய உண்மை விளக்கம்'' என்பதில் மனவாசகங் கடந்தார் என்பார் கூறுவதாவது :—

“ முத்திதனில் மூன்றுமுதல்
மொழியக் கேள்
சுத்த அநுபவத்தைத்
துய்த்தலெனு—மெத்த
இன்பத்தைக் கொடுத்தலிறை
இத்தைவிளை வித்தல்மலம்
அன்புடனே கண்டு கொளப்பா ”

எனவே, அநுபவமாகிய வின்பத்தைத்துய்ப்பது அணுவாகிய ஆன்மா (பசு) இன்பத்தைக் கொடுப்பது இறைவன் (பதி) இன்பத்தை மேன் மேலும் அதிகரிக்கச் செய்வது மலம் (பாசம்) என்று பெறலாயிற்று. ஆகையினுல் மலத்திற்கு, முத்தியிலேசெயல் இருப்பதாக உறுதி கூறப்பட்டிருக்கிறது.

தாயுமான சுவாமிகள் தம் ஆயுள் காலத்திலேயே முத்தியை அனுபவித்ததாக அவருடைய திருப்பாடல்களிலேயிருந்து நாம் அறிகிருேம்.

சிவபோகமென்னும் பேரின்பவெள்ளத்தை நாம் இனி எடுத்த தேகம் விழு முன் புசிப்பதற்குச் சேரவாரும் செகத்தீரே என்று அன்னர் திருவாய் மலர்ந்தருளி யிருக்கின்ருர்.

ஆகையால், முத்தியென்பது இந்த பூலோகத்தில் எடுத்த உடலோடு சம்பந்தப்பட்டிருக்குஞ் சமயத்தில்தான் சித்திப்பது கூடுமெனப் பெறப்படுகிறது. என்ருல் ஜீவன் முத்தி யொன்றே உண்மையா மென்பது எனது ஆராய்ச்சியின் முடிவாகும்.

**இதைப்பற்றி அறிஞர்கள் இன்னும் விவரமாக இருசார்பிலும் எழுதி மற்றவர்களுக்குத் தெரிவிக்க வேண்டிக் கொள்கிறேன்.**

18737

# தூத்துக்குடி சைவ சித்தாந்த சபை

---

1929ஆம் அக்டோபர் 20உ ஞாயிற்றுக்கிழமை மாலை 7-மணிக்கு தூத்துக்குடி சைவ சித்தாந்த சபையில் நிகழ்ந்த அநுதாபக் கூட்டத்தின் தீர்மானங்கள் :—

1. நமது சைவ சித்தாந்த சபையில் சுமார் இருபது ஆண்டுகளாக உறுப்பினராகவும், சில ஆண்டுகள் அமைச்சராகவும், சில ஆண்டுகள் நிறைவேற்றற் கழக உறுப்பினராகவுமிருந்து சபைக்கு வேண்டும் நன்மைகள் புரிந்துவந்த திரு. (சி. த.) A. R. சிதம்பரம் பிள்ளையவர்கள் 17-10-29 வியாழக்கிழமை இரவு 10½-மணிக்குத் தமது 39 ஆம் வயதில் இறைவன் திருவடி சேர்ந்தமைபற்றிச் சபையார் தங்கள் ஆற்றொணாத்துயரத்தை அவர்கள் குடும்பத்தாருக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறார்கள்.

2. ஷை பிள்ளை யவர்களின் ஞாபகார்த்தமாக அவர்களது உருவப்படத்தைக் கூடிய சீக்கிரத்தில் சபையில் திறந்துவைக்க வேண்டியது.

3. ஆண்டுகள் தோறும் சமய சம்பந்தமான பரிசளிப்பு வகைக்கு மூலதனமாக ரூ. 200 ஷை பிள்ளையவர்கள் சபைக்கு உதவியிருப்பதைப்பற்றி சபையார் தங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றார்கள்.

M. A. S. முத்துப் பிள்ளை,
காரியதரிசி.

---


# திருக்குறள் விளக்கம்

இந்நூற்கண் திருவள்ளுவ ! திருக்குறள் மூலமும், பரிமேலழகர் உரையும், விளக்கமும் சேர்ந்திருக்கின்றன. இவ்வி க்கவுரை, ஆசிரியர் மாணாக்கர்க்கு அறிவுறுத்துவதுபோல வரையப்பட் டிருக்கிறது. திருக்குறள் பயில்வோர்க்கு இப்பதிப்புப் பெருந்துணை செய்யுமென்பதில் ஐயமில்லை. நல்ல காகிதத்தில் அழகுபெற அச்சிடப்பட்டுள்ளது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அறத்துப்பால் கலிகோ பயிண்டு | | விலை ரூபா | 3 | 4 | 0 |
| பொருட்பால் | ,, | ,, | 4 | 8 | 0 |
| காமத்துப்பால் | ,, | ,, | 1 | 12 | 0 |

பண்டிட் - K. குப்புச்சாமி முதலியார்,
திருக்குறள் விளக்க ஆசிரியர்,
3/2, பிள்ளையார்கோவில் தெரு, கிருஷ்ணம்பேட்டை, திருவல்லிக்கேணி.


---


## எங்கள் விசேஷ குறைந்தவிலை விற்பனை

### 22 காரட் ரோல்டு கோல்டு புது மாடல் கைக் கெடியாரங்கள்




இதிற் கண்டபடி எந்த ஷேப் வேண்டுமானாலும் அனுப்பப்படும். வேலைப்பாடு மிகவும் உறுதி. கையில் கட்டிக்கொண்டால் தங்க ஆபாணம்போல் இருக்கும். ஒவ்வொரு கடியாரத்திற்கும் ரோல்டு கோல்டு அமெரிக்கன் கைச் சங்கிலி இனாமாய்ச் சேர்த்து அனுப்பப்படும். 5 வருஷம் உத்திரவாதம். ரூ. 4-15-0. வி. பி. வேறு.

ஜீனோன் வாட்சு கம்பெனி,
மிண்டு பில்டிங் போஸ்டு, மதராஸ்.

# அப்பர்சுவாமிகள் தேவாரம்

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் 10,000 பிரதிகள் அச்சிட்டதைப் போலவே சமாஜத்தினர் அப்பர் சுவாமிகள் தேவாரம் 5,000 பிரதிகளாவது அச்சிடலாமென்று கருதுகின்றனர். இதற்கு சுமார் ரு. 3,000 தேவை. சைவப்பற்றுடைய தருமசீலர்கள் முப்பதின்மர் ஒவ்வொருவரும் நூறு ரூபாய் இலவசமாகவாவது முன்பணமாகவாவது உபகரித்தால் இவ்வரும்பணி விரைவில் முடியும். இவ்வறிக்கையைக் கண்ணுறும் ஒவ்வொரு சைவரும் தம்மால் இயன்றால் நூறுரூபாய் அனுப்பியாவது இன்றேல் தருமசீலர் ஒருவரை அடுத்து நூறு ரூபாய் வாங்கி அனுப்பியாவது உபகரிக்க வேண்டுகிறோம்.

இங்ஙனம் :

**ம. பாலசுப்ரஹ்மண்யம்,**
*காரியதரிசி.*

---

## முருகன் திருவருட்பா

வடலூர் - இராமலிங்க சுவாமிகள் அருளிச் செய்தது; திருவருட்பாவில் ஐந்தாந் திருமுறையாகத் திகழ்வது. இராமலிங்க சுவாமிகள் திருவருட்பேறு குறித்துத் திருத்தணிகையில் முருகப் பெருமான் முன்னிலையில் "அமுத அமுகை" இந்நூலில் தேங்கி வழிகிறது. "முருகன் திருவருட்பா" கருங்கல் மனதையுங் கரைத்துக் கரைத்து இளகச் செய்யும்; திருவருட்பேற்றில் காதல் எழுப்பும். அதை ஒருகால் ஓதுவோரும் அன்பராதல் ஒருதலை.

**விலை அணா 8.**

முருகவேள் புத்தகசாலை, இராயப்பேட்டை, சென்னை.

---

## முந்துங்கள்!

விலை ரூ. 2-12-0 தான். ரூ. 2-12-0 தான்.

**130 சாமான்கள் அடங்கிய ஜர்மன் பெட்டி**



**சாமான்களின் விவரம் :**—14 காரட் ரோல்டு கோல்டு அழகிய நிப்புள்ள பவுண்டன் பேனா, ரோல்டு கோல்டு இமிடேஷன் வைர மோதிரங்கள் 2, ஷை சர்ட் பொத்தான்கள் செட் 12, ஷை கல்லிழைத்த புரூச் 1, ஜப்பான் நூதன பொம்மைகள் 6, நேர்த்தியான கத்தி 1, காமினேஷன் நூதன சாவி வளையமும் செயினும் 1, உயர்ந்த பென்சல்கள் 12, பென்சல் கிளிப்புடன் கூடிய கவர் 1, பலரகப் பென் ஹோல்டர்கள் 6, உயர்ந்த நிப்புகள் 12, மணிபர்ஸ் 1, ஜெர்மன் இங்கி புட்டி 1, இங்கி மாத்திரைகள் 12, செண்ட் புட்டி 1, தேசிய டிரான்ஸ்பர் படங்கள் 35, அழகிய பலரக சேப்டி பின்கள் 25 ஆக 130 சமான்கள் அடங்கிய ஜெர்மன் பெட்டி 1-க்கு விலை ரூபா 2-12-0 தான்.

**ஜினன் வாட்சு கம்பெனி,** மிண்டு பில்டிங் மதராஸ்.

---



**விலை ரூ. 2-14-0** **விலை ரூ. 2-14-0**

## நூதன கைத் தையல் மெஷின்

மேலே கண்ட விலை எமது அசல் விலை. சிலநாட்களுக்கு மட்டுமே இந்த விலைக்குக் கொடுக்கப்படும்.

இந்த மெஷின் புதிதாகக் கண்டுபிடிக்கப் பட்டது. இது ஒவ்வொரு குடும்பத்திலும் அவசியம் இருக்கவேண்டியது. இந்த மெஷினால் எவரும் மாதம் 100 ரூபாய்க்குக் குறையாமல் சம்பாதிக்க வழியுண்டு. இதனால், மெத்தைகள், மேஜைத் துணிகள், கைக்குட்டைகள், ஜாக்கெட்டுகள், தாவணிகள், குழந்தை சொக்காய்கள், கிழிந்த ஆடைகள் தைக்கலாம். மஸ்லின் துணியிலும், மல் துணியிலும், புஷ்பங்கள் முதலிய சித்திர வேலைகள் வெகு அழகாகச்செய்யலாம். விலை 1-க்கு ரூ. 2-14-0. திருப்தி யில்லாவிடில் பணம் வாபீஸ்.

**கனடியன் வாட்சு பீபிள்,** ஸோல் ஏஜண்ட்ஸ், ஜார்ஜ் டவுன், மதராஸ்.

---

**Printed at the Sadhu Press, 12, Ganapathi Mudali Street, Royapettah and Published by M. Balasubramania Mudaliar (Editor-in-charge) for the Saiva Siddhanta Maha Samajam, 150, Govindappa Naicken Street, G. T. Madras.**